439

# அகத்தியர்

439/3-58

# தமிழ் வாசகம்

இரண்டாம் வகுப்பு




…TRAR OF BOOK
MADRAS
21 … 1958

…ர் புத்தக சாலை

…கதுளம், திருச்சி.

TB
031(20
N58
136186

# அகத்தியர் தமிழ் வாசகம்

## இரண்டாம் வகுப்பு

[Paper used : 24 lbs. White Printing]

OFFICE FOR THE REGISTRAR OF BOOKS
21 AUG 1958
MADRAS

ஆக்கியோர்
வித்துவான் R. துரைசாமி
தலைமைத் தமிழாசிரியர், பிஷப் ஹீபர் உயர்நிலைப்பள்ளி,
தெப்பக்குளம், திருச்சிராப்பள்ளி.
K. நாகராஜ ராவ்
ஓய்வு பெற்ற தமிழாசிரியர், திருச்சிராப்பள்ளி.

APPROVED FOR CLASS USE
BY THE MADRAS TEXT-BOOK COMMITTEE
[Supplement to part I-B of the
Fort St. George Gazette dated 28-5-1958, Page 4]

அகத்தியர் புத்தகசாலை
தெப்பக்குளம் : : திருச்சிராப்பள்ளி

1958

பதிப்புரிமை] [விலை 45 ந.பை.

முதற் பதிப்பு—பிப்ரவரி, 1958
இரண்டாம் பதிப்பு—ஜூன், 1958

TB
031 Ω
N58

# முகவுரை

அகத்தியர் தமிழ் வாசகம் என்னும் எமது புத்தக வரிசையுள் இஃது இரண்டாவது ஆகும்.

அரசியலார் திருத்திய பாடத்திட்டத்தின்படி இப் புத்தகம் அழுந்திய அறிவும் (அநுபவமும்) திருந்திய தேர்ச்சியும் உள்ள ஆசிரியர்களால் எழுதப்பட்டுள்ளது. மாணவர்களின் வயதிற்கேற்பப் பாடங்களும், செய்யுட் களும், பயிற்சிகளும் அமைக்கப்பட்டுள்ளன. சொற்களும் மாணவர்களின் மனநிலைக்கேற்றவையே.

காலப்போக்கினையும் நம் தமிழ்மொழியின் வளர்ச்சி யினையும், மாணவர் நலத்தினையும் கருத்திற்கொண்டு எழுதப்பட்டுள்ள இப்புத்தகத்தைப் பள்ளிப் பொறுப் பாளர்களும் ஆசிரியர்களும் தங்கள் பள்ளிகளில் பாடப்புத்தகமாக வைத்து எம்மை ஊக்குமாறு அன்புடன் வேண்டுகின்ற,

ஆசிரியர்கள்.

சென்னை-600 008.
136186

Kabeer Printing Works, Madras (3319)

# பொருளடக்கம்


| எண் | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | படப்பயிற்சி | ... | 1 |
| 2. | உயிரினங்களின் ஒலி | ... | 2 |
| 3. | மௌன வாசிப்பு (1) | ... | 3 |
| 4. | விடுகதைகள் | ... | 5 |
| 5. | இரட்டைச்சொற்கள் | ... | 6 |
| 6. | சேர்த்துப் படித்தல் | ... | 7 |
| 7. | பூக்கள் | ... | 8 |
| 8. | சூரியன் | ... | 10 |
| 9. | திசைகள் | ... | 12 |
| 10. | பசு | ... | 14 |
| 11. | பசுவும் கன்றும் (பாட்டு) | ... | 16 |
| 12. | நல்ல பையன் | ... | 17 |
| 13. | எங்கள் குடும்பம் | ... | 19 |
| 14. | நிலாப் பாட்டு | ... | 21 |
| 15. | மௌன வாசிப்பு (2) | ... | 22 |
| 16. | எங்கள் பள்ளிக்கூடம் | ... | 23 |
| 17. | வள்ளியின் ஊர் | ... | 25 |
| 18. | அறிவாளி யார்? (கதை) | ... | 27 |
| 19. | பாப்பாப் பாட்டு | ... | 29 |
| 20. | யானை | ... | 30 |
| 21. | ஏசுநாதரும் சிறுவர்களும் (கதை) | ... | 32 |

| எண் | | | பக்கம் |
|---|---|---|---|
| 22. | பொங்கல் பண்டிகை | ... | 34 |
| 23. | கோழி (பாட்டு) | ... | 36 |
| 24. | காக்கை | ... | 37 |
| 25. | முயற்சியுள்ள காகம் (கதை) | ... | 39 |
| 26. | குத்துவிளக்கும், மின்சாரவிளக்கும் | ... | 41 |
| 27. | குயவனர் | ... | 43 |
| 28. | பாடும் பலனும் (பாட்டு) | ... | 45 |
| 29. | நாயின் நன்றி (கதை) | ... | 46 |
| 30. | ஆலமரம் | ... | 48 |
| 31. | ஆட்டம் ஆட (பாட்டு) | ... | 50 |
| 32. | எறும்புகள் | ... | 51 |
| 33. | கூடா நட்பு (கதை) | ... | 53 |
| 34. | போலீசுக்காரர் உதவி | ... | 55 |
| 35. | இரயில் பாட்டு | ... | 57 |
| 36. | சிங்கம் | ... | 58 |
| 37. | கோவிந்தன் தந்திரம் (கதை) | ... | 60 |
| 38. | ஆசை கொண்ட நாய் (பாட்டு) | ... | 62 |
| 39. | ஔவையார் | ... | 63 |
| 40. | கெட்டவன் கேடு அடைந்தான் (கதை) | ... | 65 |
| 41. | காந்தித் தாத்தா | ... | 67 |
| 42. | உழவர் வாழ்க ! (பாட்டு) | ... | 69 |
| 43. | படத்தைப் பார்த்துக் கதையைச் சொல் | ... | 70 |
| செய்யுள் : | | | |
| | உலகநீதி | ... | 71 |
| | கொன்றைவேந்தன் | ... | 73 |

# நாட்டு வணக்கம்

ஜன கண மன அதிநாயக ஜயஹே
பாரத பாக்ய விதாதா

பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
த்ராவிட உத்கல வங்கா

விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா

தவசுப நாமே ஜாகே
தவசுப ஆசிஷ மாகே

காயே தவ ஜய காதா

ஜன கண மங்கள தாயக ஜயஹே
பாரத பாக்ய விதாதா

ஜயஹே ஜயஹே ஜயஹே
ஜய ஜய ஜய ஜயஹே

# தேசீய கீதம்

இந்தியாவின் சுகதுக்கங்களை நிர்ணயிக்கிற நீதான்
மக்கள் எல்லாருடைய மனத்திலும் ஆட்சி
செலுத்துகிறாய்.

நின் திருநாமம், பஞ்சாப்பையும் சிந்துவையும்
குஜராத்தையும் மஹாராஷ்டிரத்தையும்
திராவிடத்தையும் ஒரிஸாவையும் வங்காளத்தையும்
உள்ளக் கிளர்ச்சியடையச் செய்கிறது.

அது விந்திய, ஹிமாலய மலைகளில் எதிரொலிக்கிறது;
யமுனை, கங்கை நதிகளின் இன்ப நாதத்தில்
கலக்கிறது;

இந்தியக் கடல் அலைகளால் ஜபிக்கப்படுகிறது.

அவை நின் ஆசியை வேண்டுகின்றன; நின் புகழைப்
பாடுகின்றன;

இந்தியாவின் சுகதுக்கங்களை நிர்ணயிக்கிற உனக்கு
வெற்றி, வெற்றி, வெற்றி.

# 1. படப்பயிற்சி

படத்தைப் பார்த்துச் செய்வதைச் சொல் :—



________ ________



________ ________



________ ________



________ ________



________ ________



________ ________

# 2. உயிரினங்களின் ஒலி



பிளிறும்



கர்ச்சிக்கும்



உறுமும்



கனைக்கும்



குரைக்கும்



கத்தும்



சீறும்



கரையும்



கூவும்



அகவும்



அலறும்



கூவும்

## 3. மௌன வாசிப்பு-1

### நேற்று, இன்று, நாளை

1. நேற்று நான் மதுரையில் இருந்தேன்.
இன்று நான் திருச்சியில் இருக்கிறேன்.
நாளை நான் தஞ்சையில் இருப்பேன்.

2. நேற்று நாங்கள் கோயிலுக்குப் போனோம்.
இன்று நாங்கள் சந்தைக்குப் போகிறோம்.
நாளை நாங்கள் வேலூர் போவோம்.

3. நேற்று நீ பள்ளிக்கூடம் போனாயா ?
இன்று நீ பள்ளிக்கூடம் போகிறாயா ?
நாளை நீ பள்ளிக்கூடம் போவாயா ?

4. நேற்று நீங்கள் இங்கே வந்தீர்களா ?
இன்று நீங்கள் என்னுடன் வருகிறீர்களா ?
நாளை நீங்கள் இங்கே வருவீர்களா ?

5. நேற்று கண்ணன் எங்கே சென்றான் ?
இன்று கண்ணன் எங்கே செல்கிறான் ?
நாளை கண்ணன் எங்கே செல்வான் ?

6. நேற்று வள்ளி சமையல் செய்தாள்.
இன்றும் அவளே சமையல் செய்கிறாள்.
நாளையும் அவளே சமையல் செய்வாள்.

7. நேற்று பிள்ளைகள் ஓட்டம் ஓடினார்கள்.
இன்று அவர்கள் ஓட்டம் ஓடுகிறார்கள்.
நாளை அவர்கள் ஓட்டம் ஓடுவார்கள்.

8. நேற்று நல்ல மழை பெய்தது.
இன்றும் நல்ல மழை பெய்கிறது.
நாளையும் நல்ல மழை பெய்யும்.

9. நேற்று மாடுகள் எங்கே சென்றன ?
இன்று மாடுகள் எங்கே செல்கின்றன ?
நாளை மாடுகள் எங்கே செல்லும் ?

10. நானும் நீயும் நேற்று கடைக்குப் போனோம்.
நானும் நீயும் இன்று ஆற்றுக்குப் போகிறோம்.
நானும் நீயும் நாளை ஊருக்குப் போவோம்.

11. நீயும் அவனும் நேற்று ஊருக்குச் சென்றீர்கள்.
நீயும் அவனும் இன்று எங்குச் செல்கின்றீர்கள்?
நீயும் அவனும் நாளை எங்குச் செல்வீர்கள் ?

12. நானும் நீயும் அவனும் நேற்றுப் படித்தோம்.
நானும் நீயும் அவனும் இன்று படிக்கின்றோம்.
நானும் நீயும் அவனும் நாளையும் படிப்போம்.

## 4. விடுகதைகள்

1 செம்பு நிறையக் கெம்பு. (மாதுளம்பழம்)

2 கறுப்புச் சட்டைக்காரன்
காவலுக்குக் கெட்டிக்காரன். (பூட்டு)

3 காவன்ன கோவன்ன ஆவதேன்?
காளை எருது பாய்வதேன்? (கொம்பால்)

4 சன்னல் பின்னல் கயிறு
சகலரும் பயப்படும் கயிறு
எண்ணெய் படாத கயிறு
என்ன கயிறு? (பாம்பு)

5 கத்திபோல் இலையிருக்கும்
கவரிமான் பூப்பூக்கும்
தின்னப் பழம் பழுக்கும்
தின்னாத காய் காய்க்கும். (வேம்பு)

6 காலே இரண்டுண்டு நடக்கமாட்டாள்
கண்ணே இரண்டுண்டு பார்க்கமாட்டாள்
பாலே குடிக்கமாட்டாள்
பாக்குத் தின்பாள். (பாக்குவெட்டி)

7 தண்டைச் சிலம்புக்காரி
தாவாரத்து வீட்டுக்காரி
அவளைத் தொடுவானேன்
கவலைப் படுவானேன்? (தேள்)

## 5. இரட்டைச்சொற்கள்

1. மழை சளசள என்று பெய்தது.
2. கந்தன் குடுகுடு என்று ஓடினன்.
3. மரம் மடமட என்று முறிந்தது.
4. குழந்தை கலகல என்று சிரித்தது.
5. தலை கிறுகிறு என்று சுற்றுகிறது.
6. பனைமட்டை சலசல என்று ஒலிக்கிறது.
7. பூனை மியாவ் மியாவ் என்று கத்துகிறது.
8. நாய் ளொள் ளொள் என்று குரைக்கிறது.
9. நெஞ்சு படபட என்று அடித்துக் கொள்ளுகிறது.
10. பல்லை நெறுநெறு என்று கடித்தான்.
11. சந்தனம் கமகம என்று மணக்கிறது.
12. வானம் கிடுகிடு என்று இடிக்கிறது.
13. மாணிக்கம் மளமள என்று படித்தான்.
14. பொழுது பலபல என்று விடிந்தது.
15. மின்னல் பளிச்பளிச் என்று மின்னுகிறது.
16. பயிர் தளதள என்று இருக்கிறது.

## 6. சேர்த்துப் படித்தல்

1. பூனை பால் + ஐக் குடித்தது.
2. அது மோர் + ஐ உடைய குடம்.
3. நாம் கண்கள் + ஆல் பார்க்கிறோம்.
4. இது பொன் + ஆல் செய்த மோதிரம்.
5. அவன் முருகன் + உடன் படிப்பான்.
6. வேலன் + ஒடு நானும் வந்தேன்.
7. மணி கடை + குப் போகிறான்.
8. அவன் கூலி + கு வேலை செய்கிறான்.
9. கண்ணன் ஊர் + இல் இருந்து வந்தான்.
10. கல்வி + இல் பெரியவர் கம்பர்.
11. இது வேலன் + உடைய தோட்டம்.
12. அது கோவலன் + அது சட்டை.
13. ஆறுமுகம் கடை + இல் இருக்கிறான்.
14. பழம் கூடை + உள் இருக்கிறது.
15. கோழி கூரை + மேல் இருக்கிறது.
16. பலகை + கீழ் என்ன இருக்கிறது?
17. வண்டி + முன் மாட்டைக் கட்டு.
18. கடை + பின் என்ன இருக்கிறது?
19. குதிரை + பக்கம் போகாதே.
20. நெருப்பு + இடம் நெருங்காதே.



## 7. பூக்கள்

படத்திலுள்ள பூக்களைப் பார். பார்த்து அவைகளின் பெயர்களைக் கூறுவாயா ?

பூக்கள் மிக அழகானவை. பூக்களில் பற்பல வகைகள் உண்டு. அவை வெவ்வேறு நிறமும் மணமும் உடையவை. மணம் இல்லாத பூக்களும் உண்டு. அவையும் பார்வைக்கு அழகாக இருக்கும்.

சிலவகைப் பூக்கள் செடிகளில் பூக்கும். சிலவகைப் பூக்கள் கொடிகளில் பூக்கும். சிலவகைப் பூக்கள் மரங்களில் மலரும்.

பூக்கள் நமக்குப் பல வகைகளில் பயன்படுகின்றன. படங்களையும், கூடங்களையும், திருவிழாப் பந்தல்களையும் பூக்களால் அழகு படுத்துகிறோம். நல்ல மணமுள்ள பூக்களை மக்கள் சூடிக்கொள்வர். பூக்களிலிருந்து தேன் கிடைக்கிறது. சில பூக்கள் மருந்துக்கு உதவும். பூக்களில் இருந்தே காய்கள் உண்டாகின்றன. காய்களே கனிகள் ஆகின்றன.

பூவின் இதழ்கள் மென்மையானவை. இதழ்கள் முதலில் குவிந்திருக்கும். அப்போது மொட்டு

அல்லது அரும்பு என்று பெயர். மொட்டின் இதழ் விரிவதை மலர்தல் என்கிறோம். இதழ்கள் விரிந்த பூ மலர் எனப்படும்.

பூக்கள் குறித்த பொழுதில் மலரும். சிலவகைப் பூக்கள் காலையில் மலரும். சிலவகைப் பூக்கள் மாலையில் மலரும். சிலவகைப் பூக்கள் கோடைக் காலத்தில் மலரும். சிலவகைப் பூக்கள் மாரிக் காலத்தில் மலரும். அழகுக்காகவும் மணத்திற்காக வும் பூக்களை யாவரும் விரும்புவர்.

நீயும் உன் அலுவல்களை உரிய காலத்தில் செய். யாவரும் விரும்பும்படி சிறப்பாக வாழ்.

| | | |
|---|---|---|
| பூ | குவிந்து | விழாப்பந்தல் |
| மலர் | மென்மை | சூடிக்கொள் |
| மொட்டு | பொழுது | கோடைக்காலம் |
| இதழ் | மருந்து | மாரிக்காலம் |
| அரும்பு | யாவரும் | மக்கள் |
| பூக்கும் | விரும்புவர் | வகை |
| விரியும் | கூடம் | பற்பல |
| மலரும் | கனி | |

கேள்விகள் :

1. நீ என்னென்ன பூக்களைப் பார்த்திருக்கிறாய்?
2. காய் எதிலிருந்து உண்டாகிறது?
3. தேன் எதிலிருந்து கிடைக்கிறது?



# 8. சூரியன்

நேற்று, இன்று, நாளை என்று நாம் நாட்களை எண்ணுகிறோம். ஒரு பகலும், ஓர் இரவும் சேர்ந்தது ஒரு நாள். சூரியன் தோன்றியது முதல் மறையும் வரையில் உள்ள காலம் பகல். சூரியன் மறைந்தது முதல் மறுபடியும் தோன்றும் வரையில் உள்ள காலம் இரவு. சூரியனுக்கு ஞாயிறு என்றும் பெயர் உண்டு.

சூரியன் தோன்றும் நேரம் காலை. அப்போது அது கிழக்குப் பக்கத்தில் வானத்தின் கீழ்மட்டத்தில் இருந்து புறப்படுவதுபோல் தெரியும். அப்போது இருள் நீங்கி வானம் வெளுக்கும் ; ஒளி பரவும் ; வெப்பம் உண்டாகும். நேரம் செல்லச் செல்ல அது மேல் நோக்கிப் போவதுபோல் தெரியும். நடுப்பகலில் நமது தலைக்கு மேலே தெரியும். அந்தப் பொழுதை உச்சி நேரம் என்பர். காலையிலிருந்து நடுப்பகல் வரையில் ஒளியும், வெப்பமும் வரவர அதிக மாகும்.

நடுப்பகலுக்குப் பிறகு ஒளியும், வெப்பமும் குறைந்து கொண்டே வரும். சூரியன் மேற்கில் கீழ் நோக்கிப் போவது போல் தெரியும். கடைசியாக மேற்குப் பக்கத்தில் இறங்குவது போல் மறைந்து விடும். சூரியன் மறையும் நேரம் மாலை.

உலகத்திற்கு எல்லாம் சூரியன் ஒன்று. சூரியன் இடமிருந்தே நமக்கு ஒளியும், வெப்பமும் கிடைக்கின்றன. வெப்பமும், ஒளியும் இருந்தால் தான் பயிர் பச்சைகள் தழைக்கும். எவ்வுயிரும் வாழ முடியும். மழை பெய்வதற்கும் சூரியன் வேண்டும். சூரியனை நாம் உற்றுப் பார்க்க முடியாது. பார்த்தால் கண்கள் கூசும். உலகம் நடைபெறுவதற்குக் காரணம் சூரியன். சூரியன் தரும் ஒளி வெயில் எனப்படும்.

| | | |
|---|---|---|
| **சூரியன்** | **பகல்** | **ஒளி** |
| **தோன்றும்** | **இரவு** | **வெப்பம்** |
| **மறையும்** | **நடுப்பகல்** | **கீழ்மட்டம்** |
| **கிழக்கு** | **காலை** | **வானம்** |
| **மேற்கு** | **மாலை** | **காலம்** |
| **மேல்நோக்கி** | **பொழுது** | **கிடைக்கின்றன** |
| **கீழ்நோக்கி** | **கடைசியாக** | **காரணம்** |

**கேள்விகள் :**

1. எந்தப் பொழுதிற்குப் பகல் என்று பெயர் ?
2. எந்தப் பொழுதிற்கு இரவு என்று பெயர் ?
3. சூரியனால் நமக்கு என்னென்ன கிடைக்கின்றன?



# 9. திசைகள்

சூரியன் தோன்றுகிறது. ஒரு சிறுவன் இரண்டு கைகளையும் இருபக்கங்களிலும் நீட்டிக் கொண்டு நிற்கிருன். அவன் எந்தப் பக்கமாகப் பார்த்துக் கொண்டு நிற்கிருன்? சூரியன் தோன்றும் பக்கத்தைப் பார்த்துக்கொண்டு நிற்கிருன். அந்தப் பக்கத்திற்குக் கிழக்கு என்று பெயர். சூரியன் தோன்றும் பக்கம் கிழக்கு. சிறுவன் கிழக்கு நோக்கி நிற்கிருன். அவனுடைய முதுகுப் பக்கம் எது? கிழக்கிற்கு எதிர்ப்பக்கம். அது சூரியன் மறையும் பக்கம். சூரியன் மறையும் பக்கம் மேற்கு.

கிழக்கு நோக்கி நின்ருல் வலதுகைப் பக்கம் தெற்கு ஆகும். இடதுகைப் பக்கம் வடக்கு ஆகும். கிழக்கு, தெற்கு, மேற்கு, வடக்கு எனப் பக்கங்கள்

நான்கு. இவைகளை நான்கு **திசைகள்** என்பார்கள். சூரியன் தோன்றும் பக்கத்தைக் கொண்டே நாம் திசைகளை அறிகிறோம்.

உங்கள் வீட்டின் வாயில் எந்தத் திசையை நோக்குகிறது? உங்கள் தெரு தெற்கு வடக்காக இருக்கிறதா, அல்லது கிழக்கு மேற்காக இருக்கிறதா? உங்கள் ஊரில் வாய்க்கால் அல்லது ஆறு ஓடுகிறதா? அது எந்தத் திசையை நோக்கி ஓடுகிறது?

உங்கள் பள்ளிக்கூடத்தின் படத்தில் வாயில் எந்தப் பக்கத்தில் இருக்கிறது? தோட்டம் எந்தப் பக்கத்தில் இருக்கிறது? மற்ற இரண்டு திசைகள் எவை? அவைகளைப் படத்தில் காட்டு.

| | | |
|---|---|---|
| **திசை** | **கிழக்கு** | **முதுகு** |
| **பக்கம்** | **மேற்கு** | **அறிகிறோம்** |
| **வலது** | **தெற்கு** | **வாயில்** |
| **இடது** | **வடக்கு** | **நோக்கி** |

**கேள்விகள் :**

1. நான்கு திசைகள் யாவை?
2. சூரியன் மறையும் பக்கம் எது?
3. வடக்கிற்கு எதிர்ப்பக்கம் என்ன திசை?



## 10. பசு

நான் ஒரு சாதுவான விலங்கு. என் பெயர் பசு. என்னை ஆ என்றும் அழைப்பர். நான் உங்கள் வீடுகளில் வளர்கிறேன். மனிதர்கள் என்னைப் பிரியமாக வளர்க்கிறார்கள். நானும் என்னை வளர்ப்பவர்களிடம் அன்பாகப் பழகுவேன்.

நான் வைக்கோலும், புல்லும் தின்பேன். கழுநீரையும், தூய தண்ணீரையும் குடிப்பேன். தவிடு, பிண்ணாக்கு, பருத்திக்கொட்டை, அகத்திக் கீரை முதலியனவும் எனக்கு உணவு ஆகும்.

நான் பால் தருகிறேன். என்னுடைய பால் மக்களுக்கு ஓர் நல்ல உணவு. சிறு குழந்தை களுக்கு என் பாலை ஊட்டுவர்.

என் பால் வெண்மை நிறமும், இனிய சுவையும் உடையது. என் பாலைக் காய்ச்சித் தயிர் ஆக்குவார்

கள். தயிரைக் கடைந்து வெண்ணெய் எடுப்பார்கள். வெண்ணெயைக் காய்ச்சினுல் நெய் ஆகும். தயிரைக் கடைந்தால் அது மோர் ஆகும். தயிர், மோர், வெண்ணெய், நெய் இவைகள் உங்கள் உடலுக்கு நன்மை தரும்.

என் குழந்தைக்குக் கன்றுக் குட்டி என்று பெயர். ஆண் கன்று காளை எனப்படும். அது வளர்ந்தால் எருது எனப்படும். எருதுகள் நிலம் உழுகின்றன; வண்டி இழுக்கின்றன; பொதி சுமக்கின்றன. பெண் கன்று கிடாரி எனப்படும். அது வளர்ந்த பின் பசுமாடு ஆகும். உங்களுக்குப் பால் கொடுக்கும். என் சாணம் உங்கள் வீட்டைச் சுத்தம் செய்யும். நிலத்திற்கு எருவு மாகும். நானும் என் இனத்தாரும் உங்களுக்கு மிகவும் பயன்படுகிறேம்.

| | | |
|---|---|---|
| சாதுவான | ஊட்டுவர் | சாணம் |
| விலங்கு | குழந்தை | எரு |
| ஆ | சுவை | பொதி |
| பழகு | காளை | காய்ச்சி |
| தூய | கிடாரி | அன்பாக |

**கேள்விகள் :**

1. காளை என்று எதற்குப் பெயர் ?
2. பெண் கன்றுக்கு என்ன பெயர் ?
3. பாலைக் கடைந்தால் என்னென்ன பொருள்கள் கிடைக்கும் ?

## 11. பசுவும் கன்றும்

தோட்டத்தில் மேயுது
வெள்ளைப் பசு—அங்கே
துள்ளிக் குதிக்குது
கன்றுக் குட்டி.

அம்மா என்குது
வெள்ளைப் பசு—உடன்
அண்டையில் ஓடுது
கன்றுக் குட்டி.

நாவால் நக்குது
வெள்ளைப் பசு—பாலை
நன்றாய்க் குடிக்குது
கன்றுக் குட்டி.

முத்தம் கொடுக்குது
வெள்ளைப் பசு—மடி
முட்டிக் குடிக்குது
கன்றுக் குட்டி.

—கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை



## 12. நல்ல பையன்

இந்தப் படத்தில் காண்பவன் ஒரு நல்ல பையன். இவன் பெயர் முருகன்.

இவன் விடியற்காலையில் துயிலெழுவான். பல் விளக்குவான். முகம், கை, கால்களைக் கழுவிக் கொள்வான். கடவுளை நினைத்து வணங்குவான். "ஆண்டவரே, எனக்கு நல்ல அறிவு தந்து அருள்க" என்று வேண்டுவான்.

நாள்தோறும் தன் பாடங்களை நன்றாகப் படிப்பான். எழுத வேண்டியவைகளை எழுதுவான். ஒவ்வொரு நாளும் குளிப்பான். துவைத்து உலர்த்திய உடைகளை உடுப்பான். தலையை வாரி சீவிக் கொள்வான். சுத்தமாக இருப்பான். வீட்டில் உள்ள உணவை விருப்பமுடன் உண்பான்.

நேரம் தவருமல் பள்ளிக்கூடம் போவான். வழியில் வேடிக்கை பார்க்கமாட்டான். மற்றப் பிள்ளைகளோடு நட்பும் ஒற்றுமையும் உடையவனுக இருப்பான். ஆசிரியர் கற்பிக்கும்போது பாடங்களைக் கவனமாகக் கேட்பான். அவர் சொற்படி நடப்பான். பள்ளிக்கூடம் விட்டதும் நேராக வீட்டிற்கு வருவான். மாலையில் சிறிது நேரம் விளையாடுவான். பள்ளிக்கூடத்தில் நடந்த பாடத்தை வீட்டில் வந்து மறுபடியும் படிப்பான். அவைகளை மறக்காமல் உள்ளத்தில் இருத்திக் கொள்வான். படிப்பில் கண்ணும், கருத்துமாக இருப்பான். தன் புத்தகங்களையும், மற்றைய பொருள்களையும் செம்மையாக வைத்துக் கொள்வான். பெரியோரிடம் பணிவாக இருப்பான். எப்போதும் உண்மையே பேசுவான்.

| | | |
|---|---|---|
| **நட்பு** | **துயிலெழு** | **வணங்குவான்** |
| **அறிவு** | **நாள்தோறும்** | **வேண்டுவான்** |
| **தந்து** | **துவை** | **அருள்க** |
| **ஒற்றுமை** | **உலர்த்திய** | **கற்பித்தல்** |
| **தவருமல்** | **வேடிக்கை** | **பணிவு** |
| **செம்மை** | **கவனம்** | |

**கேள்விகள் :**

1. நல்ல பையன் கடவுளிடம் என்ன வேண்டுவான் ?
2. அவன் வீட்டில் என்னென்ன செய்வான் ?
3. அவன் தன் பொருள்களை எவ்வாறு வைத்துக் கொள்வான் ?



## 13. எங்கள் குடும்பம்

[மணி பேசுகிறான். பெற்றோருக்கு இடையில் நிற்பவன்தான் மணி.]

இது எங்கள் குடும்பப் படம். நாற்காலியில் உட்கார்ந்திருப்பவர் எங்கள் தகப்பனார். அவர் செய்தித்தாள் (பத்திரிகை) படித்துக்கொண்டு இருக்கிறார். பக்கத்தில் நிற்பவர் எங்கள் தாயார். என் அண்ணன் எழுதிக்கொண்டு இருக்கிறான். சட்டையில் பூவேலை செய்பவள் என் அக்காள். என் தங்கையும், தம்பியும் பொம்மைகளை வைத்து விளையாடிக் கொண்டு இருக்கிறார்கள்.

எங்கள் தகப்பனாருக்கு அரசாங்க அலுவலகத்தில் வேலை. அவர் காலை ஒன்பது மணிக்கு உணவு

உண்பார். நாங்களும் அவருடன் உண்போம். எங்கள் தாயார் உணவு சமைத்துப் போடுவார்.

உணவு உண்டபின் எங்கள் தகப்பனுர் அலுவலகத்திற்கு புறப்படுவார். நானும், என் அக்காளும், அண்ணனும் பள்ளிக்கூடத்திற்குச் செல்வோம். என் தம்பியும், தங்கையும் தாயாருடன் வீட்டிலேயே இருப்பார்கள்.

மாலையில் ஐந்து மணிக்கு நாங்கள் பள்ளிக்கூடத்தை விட்டு வீட்டுக்கு வருவோம். எங்கள் தகப்பனுர் ஆறு மணிக்கு வருவார். வரும்போது எங்களுக்குத் தின்பண்டம் வாங்கி வருவார். இரவிலும் நாங்கள் எல்லோரும் உடன் இருந்து உண்போம்.

தகப்பனுர் வீட்டிற்கு வேண்டிய பொருள்களை வாங்கித் தருவார். எங்கள் தாயார் அவைகளை வீட்டிற்குப் பயன்படுத்துவார்.

எங்கள் பெற்ருேர் எங்களை அன்போடு வளர்க்கிருர்கள். நாங்களும் அவர்களிடம் பணிவும், நன்றியும் உடையவர்களாக இருக்கிருேம். எங்கள் குடும்பம் ஒரு நல்ல குடும்பம்.

| | | |
|---|---|---|
| குடும்பம் | செய்தித்தாள் | பூவேலை |
| தின்பண்டம் | அரசாங்கம் | சமைத்து |
| பணிவு | அலுவலகம் | அருந்து |

**கேள்விகள் :**

1. பெற்ருேர் பிள்ளைகளை எப்படி வளர்க்கிருர்கள் ?
2. தகப்பனுர் என்ன செய்கிருர் ?
3. தாயார் என்ன செய்கிருர் ?



## 14. நிலாப் பாட்டு

நிலா நிலா ஓடி வா.
நில்லாமல் ஓடி வா.
மலைமேலே ஏறி வா.
மல்கைப்பூ கொண்டு வா.
சிங்காரக் குழந்தைக்குச்
சின்னத் தலையில் சூட்ட வா.
மாலையிலே குழந்தைக்கு
மகிழ்ச்சி தர ஓடி வா.
பசிக்காமல் குழந்தைக்குப்
பாலுஞ் சாதம் ஊட்ட வா.
தூங்காத குழந்தையைத்
தொட்டிலிட்டு ஆட்ட வா.

—ரா. து. கம்பதாசன்

# 15. மௌன வாசிப்பு-2

## (உடல் நல முறைகள்)

காலையில் விரைவில் எழுந்திருக்க வேண்டும்.
ஊருக்கு வெளியில் போக வேண்டும்.
அங்கு மலம், நீர் கழிக்க வேண்டும்.
ஆறு குளங்களின் கரைகளில் மலம், நீர் கழிக்கக் கூடாது.
ஆலம் விழுதால் பல் துலக்க வேண்டும்.
நல்ல பற்பொடியாலும் பல் துலக்கலாம்.
கைகால் முகங்களைச் சுத்தம் செய்ய வேண்டும்.
சுத்தமான தண்ணீரில் குளிக்க வேண்டும்.
உலர்ந்த துணியால் உடம்பைத் துடைக்க வேண்டும்.
அழுக்கற்ற ஆடைகளை உடுக்க வேண்டும்.
கைகால்களைக் கழுவிச் சாப்பிட வேண்டும்.
உணவு தூய்மையாக இருக்க வேண்டும்.
நகத்தைக் கடிக்கக் கூடாது.
எச்சிலைக் கையால் தொடக் கூடாது.
ஈ மொய்த்த பண்டங்களைத் தின்னக் கூடாது.
இருக்கும் இடம் சுத்தமாக இருக்க வேண்டும்.
இரவில் முன்னேரத்தில் படுக்க வேண்டும்.

சுத்தம் சோறு போடும்.
சுத்தம் சுகம் தரும்.

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்.

## 16. எங்கள் பள்ளிக்கூடம்

**முத்து :** மணி, உங்கள் பள்ளிக்கூடத்தின் பெயர் என்ன ?

**மணி :** எங்கள் பள்ளிக்கூடத்தின் பெயர் முருகன் பள்ளி.

**முத்து :** உங்கள் பள்ளிக்கூடத்தில் எத்தனை வகுப்புக்கள் இருக்கின்றன ?

**மணி :** நான்கு வகுப்புக்கள் இருக்கின்றன.

**முத்து :** நீ எந்த வகுப்பில் படிக்கிறாய் ?

**மணி :** நான் இரண்டாவது வகுப்பில் படிக்கிறேன்.

**முத்து :** உன் வகுப்பில் எத்தனைப் பிள்ளைகள் படிக்கிறார்கள் ?

**மணி :** என் வகுப்பில் முப்பத்தைந்து பிள்ளைகள் படிக்கிறார்கள்.

**முத்து :** பெண்களும் படிக்கிறார்களா ?

**மணி :** ஆம். பெண்களும் படிக்கிறார்கள்.

**முத்து :** உங்கள் பள்ளிக்கூடத்தில் விளையாட்டுக்கள் உண்டா ?

**மணி :** உண்டு. விளையாட்டு நேரத்தில் விளையாட்டுக்கள் நடைபெறும். அந்நேரத்தில் நாங்கள் விளையாடுவோம்.

**முத்து :** ஆசிரியரும் உங்களுடன் விளையாடுவாரா ?

**மணி :** ஆம். எங்கள் ஆசிரியரும் எங்களுடன் விளையாடுவார்.

**முத்து :** உங்கள் ஆசிரியர் எப்படிப்பட்டவர் ?

**மணி :** எங்கள் ஆசிரியர் மிகவும் நல்லவர். பிள்ளைகளிடம் அன்பு உடையவர். பாடங்களைத் தெளிவாகக் கற்பிக்கிறார். நல்ல முறையில் எங்களைப் பழக்குகிறார்.

**முத்து :** உங்கள் பள்ளிக்கூடத்தில் என்னென்ன பாடங்கள் உண்டு ?

**மணி :** தமிழ், கணக்கு, பொது அறிவு, நல்லொழுக்கம், கைவேலை, ஆடல் பாடல், விளையாட்டுக்கள் ஆகிய எல்லாம் உண்டு.

**முத்து :** உங்கள் பள்ளிக்கூடத்தை நீங்கள் எப்படி நினைக்கிறீர்கள் ?

**மணி :** எங்கள் பள்ளிக்கூடத்தை நாங்கள் கோயிலைப்போல் சிறப்பாக நினைக்கிறோம்.

| | | |
|---|---|---|
| **விளையாட்டு** | **தெளிவாக** | **பழக்குகிறார்** |
| **சிறப்பாக** | **கைவேலை** | **ஆடல்** |
| **நினை** | **நல்லொழுக்கம்** | **பாடல்** |
| **நல்லவர்** | **பொது அறிவு** | **முறை** |

**கேள்விகள் :**

1. விளையாட்டுக்கள் எப்போது நடைபெறும் ?
2. ஆசிரியர் எப்படிப்பட்டவர் ?
3. பிள்ளைகள் பள்ளிக்கூடத்தை எவ்வாறு நினைக்கிறார்கள் ?



# 17. வள்ளியின் ஊர்

**பொன்னி :** வள்ளி, உங்கள் ஊர் நல்ல ஊரா?

**வள்ளி :** ஆம். எங்கள் ஊர் நல்ல ஊர்.

**பொன்னி :** நல்ல ஊர் என்றுல் என்ன ?

**வள்ளி :** நல்ல மக்களும், நல்ல வசதிகளும் உள்ள ஊர் நல்ல ஊர்.

**பொன்னி :** உங்கள் ஊர் மக்கள் எப்படிப்பட்டவர்கள் ?

**வள்ளி :** எங்கள் ஊர் மக்கள் நல்ல மக்கள். ஒருவரை ஒருவர் விரும்புகிருர்கள். ஒற்றுமையாக வாழ்கிருர்கள். தம்தம் வேலேகளேச் செவ்வையாகச் செய்கிருர்கள். அவர்கள் ஊரின் பொது நலன்களில் கருத்து உடையவர்கள்.

**பொன்னி :** உங்கள் ஊரில் எல்லா வசதிகளும் உண்டா?

**வள்ளி :** உண்டு. ஊரை அடுத்து ஒரு சிறு ஆறு ஓடுகிறது. ஊரில் ஓர் ஏரியும் இருகிறது. மழைக் காலத்தில் ஏரியில் நீர் நிரம்பும். பாசனத்திற்குத் தட்டு ஏற்படாது. குடிநீர்க் கிணறுகள் இருக்கின்றன.

**பொன்னி :** உங்கள் ஊரின் அமைப்பு எப்படிப் பட்டது?

**வள்ளி :** ஊரைச் சுற்றித் தோப்புக்கள், தோட்டங்கள், வயல்கள் இருக்கின்றன. நல்ல காற்றோட்டமும், வெளிச்சமும் உண்டு. வெட்ட வெளிகள் உண்டு. தெருக்கள் ஒழுங்காக இருக்கும். வீடுகள் வரிசையாக இருக்கும். மந்தை, சாவடி, பள்ளிக்கூடம், கோயில், சிறு கடைத்தெரு, சந்தைப்பேட்டை ஆகிய எல்லாம் உண்டு.

**பொன்னி :** ஒரு நாள் நான்-அங்கு வருகிறேன்.

**வள்ளி :** உன்னை நான் வரவேற்கிறேன்.

| | | |
|---|---|---|
| **வசதி** | **பொதுநலன்** | **வெட்டவெளி** |
| **மக்கள்** | **குடிநீர்** | **மந்தை** |
| **அடுத்து** | **ஒழுங்காக** | **சந்தைப்பேட்டை** |
| **கருத்து** | **நிரம்பும்** | **வரவேற்கிறேன்** |
| **செவ்வையாக** | **பாசனம்** | **தட்டு** |

**கேள்விகள் :**

1. வள்ளியின் ஊரில் என்னென்ன வசதிகள் உண்டு?
2. எப்படிப்பட்ட ஊர் நல்ல ஊர்?
3. ஊர் மக்கள் எப்படிப்பட்டவர்கள்?

# 18. அறிவாளி யார்?

மாணிக்கம் என்பவர் ஒரு செல்வர். அவருக்கு இரண்டு பிள்ளைகள் இருந்தார்கள். அவர்களில் மூத்தவன் செருக்கு உடையவன். தானே அறிவாளி என்று பெருமையாகப் பேசுவான். இளையவன் அடக்கம் உடையவன். தன்னைப் பற்றிப் பெருமை யாகப் பேசமாட்டான். ஒருநாள் காலையில் அவர் தம் இரு பிள்ளைகளையும் அழைத்தார். "உங்களில் யார் அறிவாளி" என்று கேட்டார். மூத்தவன் "நானே அறிவாளி" என்றான். இளையவன் "தாங்களே அறிந்து சொல்லுங்கள்" என்றான்.

அப்போது அவர் அவ்விருவரையும் பார்த்து "நான் இப்போது உங்கள் ஒவ்வொருவருக்கும் ஐந்து ரூபாய் கொடுக்கப் போகிறேன். நீங்கள் ஒவ்வொருவரும் இத்தொகைகளைக் கொண்டு உங்கள் அறைகளை நிறையச் செய்யவேண்டும். மாலையில் நான் வந்து பார்ப்பேன். அப்பொழுது யார் அறிவாளி என்று சொல்வேன்" என்று கூறினார்.

அப்படியே அவர் ஆளுக்கு ஐந்து ரூபாய் தனித் தனியே கொடுத்தார். பின் தன் அலுவல்களைக் கவனிக்கத் தோட்டத்திற்குச் சென்றார். மாலையில் சில நண்பர்களையும் அழைத்துக் கொண்டு மூத்தவ னுடைய அறைக்குச் சென்றார்.

அறைக்கு வெளியே மூத்தவன் நின்றான். உள்ளே நுழையவும் இடம் இல்லை. அறை நிறைய

வைக்கோல் கட்டுக்கள் இருந்தன. தகப்பனும் மற்றவர்களும் அவனைப் பார்த்து " நீ அறிவில்லாத வன் " என்று கூறி அகன்றார்கள்.

பிறகு இளையவன் அறைக்குச் சென்றார்கள். அறை குப்பை கூளம் இல்லாமல் தூய்மையாக இருந்தது. தரையில் புதிய பாய் விரித்து இருந்தது. விளக்கு ஏற்றி வைத்திருந்தது. ஊதுவத்தி மணம் கமழ்ந்தது. ஒரு தட்டில் வெற்றிலை, பாக்கு, பழம், பூ, சந்தனம் முதலியவை வைக்கப்பட்டிருந்தன. இளையவன் வந்தவர்களைப் பார்த்து, " வணக்கம், வருக " என்று அழைத்தான். " உட்காருங்கள் " என்று வேண்டிக்கொண்டான். சந்தனம் முதலியவை களைக் கொடுத்தான்.

அவர்கள் மகிழ்ந்தார்கள். ' நீ தான் அறிவாளி ' என்று சொன்னார்கள். " உன் அறை ஒளியும், மண மும், இன்பமும் நிறைந்து இருக்கிறது ; ஐந்து ரூபாயைப் பயன்படச் செய்திருக்கிறாய் " என்றார்கள்.

| | | |
|---|---|---|
| மூத்தவன் | ஊதுவத்தி | கமழ்ந்தது |
| இளையவன் | அறை | வணக்கம் |
| அறிவாளி | வருக | மணம் |
| தொகை | தூய்மை | |

**கேள்விகள் :**

1. இரண்டு மக்களில் அறிவில்லாதவன் யார் ?
2. மூத்தவன் தன்னைப் பற்றி என்ன கூறினான் ?
3. அறிவாளி ரூபாயை எப்படிப் பயன்படச் செய்தான் ?

## 19. பாப்பாப் பாட்டு

1. ஓடி விளையாடு பாப்பா !—நீ
ஓய்ந்திருக்கலாகாது பாப்பா !
கூடி விளையாடு பாப்பா !—ஒரு
குழந்தையை வையாதே—பாப்பா !

2. சின்னஞ் சிறுகுருவி போலே—நீ
திரிந்து பறந்துவா பாப்பா !
வன்னப் பறவைகளைக் கண்டு—நீ
மனதில் மகிழ்ச்சிகொள்ளு பாப்பா !

3. பொய்சொல்லக் கூடாது பாப்பா !—என்றும்
புறஞ்சொல்ல லாகாது பாப்பா !
தெய்வம் நமக்குத்துணை பாப்பா !—ஒரு
தீங்குவர மாட்டாது பாப்பா !

4. தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற—எங்கள்
தாயென்று கும்பிடடி பாப்பா !
அமிழ்தில் இனியதடி பாப்பா !—நம்
ஆன்றோர்கள் தேசமடி பாப்பா !

5. உயிர்க ளிடத்தில் அன்பு வேணும் ;—தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்
வயிர முடையநெஞ்சு வேணும் ;—இது
வாழும் முறைமையடி பாப்பா !

—பாரதியார்



## 20. யானை

யானை ஒரு பெரிய விலங்கு. விலங்கிற்கு மிருகம் என்றும் பெயர்.

யானையின் உடல் எவ்வளவு பருத்து இருக்கிறது! பாருங்கள். கால்கள் தூண்கள் போலவும், குட்டையாகவும் இருக்கின்றன. வால் குட்டையானது. வாலின் நுனியில் தடித்த மயிர்கள் இருக்கின்றன. தலையின் மேற்புறத்தில் இரண்டு பக்கங்களிலும் மேடாக இருக்கின்றன; நடு இடம் பள்ளமாக இருக்கிறது. கழுத்தும் பருத்துக் குட்டையாக இருக்கிறது. காதுகள் முறம் போல் இருக்கின்றன.

யானையின் கண்கள் மிகச் சிறியவை. அவைகளால் அது தரையிலுள்ள மிகச் சிறிய பொருள்களையும் காணமுடியும்.

முகத்திலிருந்து ஓர் உறுப்பு நீண்டு தொங்கு கிறது. அதற்குத் தும்பிக்கை என்று பெயர். அதுவே யானையின் மூக்கு. அது யானைக்குக் கை போலவும் உதவுகிறது.

காடுகளில் யானைகள் கூட்டங் கூட்டமாக வாழும். காட்டு யானைகளை மனிதர்கள் பிடித்து வந்து, பழக்கி வளர்க்கிறார்கள். பழகிய யானைகள் மனிதரிடம் சாதுவாக நடந்து கொள்ளும். பெரிய மரங்களைச் சுமத்தல், இழுத்து வருதல் முதலிய அரிய வேலைகளைச் செய்யும்.

யானை தனக்கு உணவு கொடுப்பவரிடம் அன்பாக நடந்து கொள்ளும். தன்னிடம் குறும்பு செய்தவர் களை அது என்றைக்கும் மறக்காது. கறு வைத்து அவர்களைப் பழி வாங்கும்.

நாணற்புல், தழைகள், மூங்கிற் குருத்து, கரும்பு முதலியன யானைக்கு உணவாகும்.

பெரிய கோயில்களில் யானைகளை வளர்ப்ப துண்டு. ஊர்வலங்களில் யானை முன்னே வருவதும் உண்டு.

| | | |
|---|---|---|
| **விலங்கு** | **சாதுவாக** | **ஊர்வலம்** |
| **உறுப்பு** | **தடித்த** | **பழிவாங்கும்** |
| **குருத்து** | **தும்பிக்கை** | **கறு** |

**கேள்விகள் :**

1. தும்பிக்கை யானைக்கு எவ்வாறு உதவுகிறது?
2. யாரை அது பழி வாங்கும்?
3. யானையின் உணவுகள் யாவை?



## 21. ஏசுநாதரும் சிறுவர்களும்

இந்தப் பாடத்திலுள்ள படத்தை உற்றுப் பாருங்கள். ஒரு பெரியவர் நின்றுகொண்டிருக்கிறார். அந்தப் பெரியவர் ஏசுநாதர். ஏசுநாதர் கடவுளின் திருக்குமாரர். கிறிஸ்தவ சமயத்தின் கர்த்தர். மக்களுக்கு அவர் மெய்யறிவை அறிவித்தார். ஒருநாள் ஏசுநாதர் ஓர் இடத்தில் மக்களுக்கு நல்ல செய்திகளை ஓதிக்கொண்டு இருந்தார்.

அப்போது சில சிறுவர்கள் அவரிடம் செல்ல விரும்பினார்கள். அங்கிருந்த மனிதர்கள் சிறுவர்களை ஏசுநாதரிடம் போகாதபடித் தடுத்தார்கள். அவர்கள் தடுப்பதை ஏசுநாதர் அறிந்தார்.

“ நீங்கள் குழந்தைகளைத் தடுக்காதீர்கள். அவர்களை என்னிடம் வரவிடுங்கள். குழந்தைகள் குற்றம்

இல்லாதவர்கள். தூய உள்ளம் உடையவர்கள். மனிதர்களாகிய நீங்களும் குழந்தைகளைப் போல் இருங்கள். அப்பொழுதுதான் கடவுள் அருள் உங்களுக்குக் கிடைக்கும்'' என்று சொன்னார்.

அவர்கள் அவ்வாறே அச்சிறுவர்களை ஏசுநாதரிடம் போகவிட்டார்கள். சிறுவர்கள் ஏசுநாதரை நேரில் கண்டு மிகவும் மகிழ்ந்தார்கள். அவர் அவர்களை அன்புடன் வாழ்த்தினார். சிறுவர்கள் ஏசுநாதரை வணங்கினார்கள். அவர் கூறிய நல்ல சொற்களைக் கடைப்பிடித்து ஒழுகினார்கள். பெரியவர்கள் ஆனபிறகு நாட்டிற்கு நல்லவர்களாக வாழ்ந்தார்கள்.

பிள்ளைகளே, நீங்கள் இன்று குழந்தைகள். நீங்கள் நாளடைவில் பெரியவர்கள் ஆவீர்கள். அப்போது நல்லவர்களாக இருந்து நாட்டிற்குத் தொண்டு செய்யுங்கள்.

| | | |
|---|---|---|
| நாடு | பெரியவர் | உற்றுப்பார் |
| சமயம் | தடுத்தார்கள் | கடவுள் |
| மெய்யறிவு | குற்றம் | வாழ்த்தினார் |
| கர்த்தர் | உள்ளம் | கடைப்பிடித்து |
| தூய | அருள் | நாளடைவில் |

**கேள்விகள் :**

1. சிறுவர்கள் என்ன விரும்பினார்கள்?
2. அவர்களை யார் தடுத்தார்கள்?
3. பெரியவர்களைப் பார்த்து ஏசுநாதர் என்ன சொன்னார்?



## 22. பொங்கல் பண்டிகை

உழவர் சொல்லுகிருர். பொங்கலோ ! பொங்கல். தைப் பொங்கல். ஆடிப்பட்டத்தில் விதைத்தோம். பயிர்களை விளைவித்தோம். வயல்களைக் காவல் செய்தோம். கதிர்கள் முற்றித் தாள்கள் தலை சாய்ந்தன. அறுவடை செய்தோம். நெல்லைக் குவித்தோம். களஞ்சியம் நிரம்பியது.

வளம் தந்த பகலவனைப் **பூசித்து** வணங்கு வோம். புதிய நெல்லரிசியைக் கொண்டு புதிய பானை யில் வெல்லப் பொங்கல் பொங்குவோம். கரும்பும், மஞ்சளும், தேங்காயும், பழமும் உடன்வைத்துக் கதிரவனுக்குப் படைப்போம். நாமும் மகிழ்வுடன் உண்போம்.

நாளைக்கு மாட்டுப் பொங்கல். உழவில் மாடுகள் நம்முடன் உழைத்தன. அவைகளை நாம் பாராட்டு வோம். அவைகளைக் குளிப்பாட்டுவோம். கோடித் துணியும், பூவும் அணிவிப்போம். சந்தனமும், மஞ்சளும், குங்குமமும் பூசி அழகு படுத்துவோம். வெல்லப் பொங்கலைப் படைத்து உண்பிப்போம். மாடுகளுக்கு ஒய்வு தருவோம். சல்லி கட்டி அவை களை ஓட விடுவோம். மாட்டுப் பொங்கல் நாளில் மாடுகளுக்குக் கொண்டாட்டம்.

மறுநாள் மாட்டு வேடிக்கை. பாய்ச்சல் காளை களை அவிழ்த்து விடுவார்கள். பரந்த வெளியில் அவை நாலுகால் பாய்ச்சலில் ஓடும். துணிவுள்ள பலர் மாடுகளைப் பிடிப்பார்கள். **மாடுகள் புலிகள் போலவே பாயும்.** வீரர்கள் அச்சமின்றி அவைகளை நெருங்கிப் பிடிப்பார்கள். பொங்கல் பண்டிகை தமிழ் நாட்டில் ஒரு சிறந்த பண்டிகை.

| | | |
|---|---|---|
| **பொங்கல்** | **கதிர்** | **தலைசாய்ந்தன** |
| **விதைத்தோம்** | **தாள்** | **அறுவடை** |
| **காவல்** | **கதிரவன்** | **குவித்தோம்** |
| **படைத்தல்** | **பகலவன்** | **களஞ்சியம்** |
| **வீரர்கள்** | **அணிவிப்போம்** | **கோடித்துணி** |
| **தமிழ்நாடு** | **உண்பிப்போம்** | **பாய்ச்சல்** |

**கேள்விகள் :**

1. பொங்கல் அன்று யாருக்குப் பூசை செய்வார்கள்?
2. மாடுகளுக்கு என்று கொண்டாட்டம் ?
3. மாட்டு வேடிக்கை என்று நடைபெறும் ?



## 23. கோழி

கோழீ ! கோழீ ! வா வா ;
கூரை விட் டிறங்கி வா ;
கோழீ ! முட்டை இட வா
கூட்டில் அடை காக்க வா.

பெட்டைக் கோழீ ! வா வா ;
பிள்ளைகளைக் கூட்டி வா ;
குட்டை நெல்லைக் கொட்டினேன் ;
கொத்திக் கொத்தித் தின்ன வா.

வஞ்சமாய்ப் பருந்ததோ
வானில் வட்டம் போடுது,
குஞ்ச ணைத்துக் காப்பாயோ?
கூட்டில் கொண்டு சேர்ப்பாயோ?

—கவிமணி சி. தேசிக விநாயகம் பிள்ளை



## 24. காக்கை

நான் ஒரு பறவை. என் பெயர் காக்கை. நான் என் நல்ல பண்புகளைக் கூறுகிறேன்.

நாள்தோறும் நான் பொழுது விடியுமுன் எழுந்துவிடுவேன். "கா கா" என்று கரைவேன். என் குரலோசையைக் கேட்டு மக்கள் தூக்கத்திலிருந்து எழுந்திருப்பார்கள்.

என் நிறம் கறுப்பு. என் இனத்தார் எல்லோரும் கரியவர்கள். எங்களில் கழுத்தில் சாம்பல் நிறம் உடையவர்கள் சிலர் உண்டு. உடல் முழுவதும் கருமையாக இருப்பவர்களை 'அண்டங்காக்கைகள்' என்று சொல்வார்கள்.

எங்களுக்கு இரண்டு கண்கள் உண்டு. ஆனால் இரண்டு கண்களுக்கும் கருவிழி ஒன்றுதான். அது இரண்டு கண்களுக்கும் வரும். அதனால்தான் நாங்கள் தலையைச் சாய்த்துச் சாய்த்துப் பார்க்கிறோம்.

எங்களில் ஒருவர் ஏதாவது ஒரு தீனியைக் கண்டால் எங்கள் இனத்தாரை அழைப்போம். எல்லோரும் சேர்ந்தே உண்போம். கூட்டமாகவே இரைதேடப் போவோம். சேர்ந்தே வாழ்வோம். எங்களில் ஒருவர் இறந்து போனுல் எல்லோரும் கூடித் துயரப்படுவோம்.

நாங்கள் உங்களுக்கும் நன்மை செய்கிருேம். தெருக்களில் எலி முதலியன செத்துக் கிடந்தால், அவற்றைத் தின்போம். தெருக்களில் உள்ள கெட்ட நாற்றம் நீங்கும். அதனுல் எங்களை 'வானத் தோட்டிகள்' என்று அழைப்பார்கள்.

நாங்கள் வீட்டுக் கூரைகளில் வந்து உட்காரு வோம். 'கா கா' என்று கரைவோம். அப்போது வீட்டில் உள்ளவர்கள் விருந்து வரும் என்று சொல்வார்கள். எங்களிடம் உள்ள நல்ல பண்புகளை நீங்களும் கைக்கொண்டு சேர்ந்தே வாழுங்கள்.

| | | |
|---|---|---|
| பண்பு | இனத்தார் | அண்டங் காக்கை |
| கரையும் | இரை | பறவை |
| கறுப்பு | துயரம் | வானத்தோட்டி |
| விருந்து | நீங்கும் | நாற்றம் |

**கேள்விகள் :**

1. காக்கைக்குக் கண்விழி எத்தனை ?
2. ஒரு காக்கை ஏதாவது தீனியைக் கண்டால் என்ன செய்யும் ?
3. காக்கையை வானத்தோட்டி என்று சொல்வதற் குக் காரணம் என்ன ?



## 25. முயற்சியுள்ள காகம்

மேலே உள்ள படங்களைப் பாருங்கள்.

1. ஒரு சாடி இருக்கிறது. சாடியின் மேல் ஒரு காகம் உட்கார்ந்திருக்கிறது. சாடியின் அடியில் சிறிது நீர் இருக்கிறது.

2. காகம் சாடிக்குள் எட்டிப் பார்க்கிறது.

3. காகம் சாடியின் மேல் உட்கார்ந்திருக்கிறது. அதன் வாயில் ஒரு சிறு கல் இருக்கிறது.

4. சாடியின் அடியில் கற்கள் இருக்கின்றன. நீர் மேலாக இருக்கிறது. காகம் நீரைக் குடிக்கிறது.

இக்கதையைத் தெரிந்து கொள்ளலாமா?

வெயில் காலத்தில் ஒரு நாள் ஒரு காக்கைக்கு மிக நீர் வேட்கை உண்டாயிற்று. நீரைத் தேடிக் கொண்டு எங்கெங்கோ பறந்து போய்ப் பார்த்தது.

ஒரு வீட்டின் முற்றத்தில் ஒரு சாடியைக் கண்டது. அதன்மேல் போய் உட்கார்ந்தது. உட்புறத்தில் உற்றுப் பார்த்தது. அடியில் சிறிது தண்ணீர் இருக்கக் கண்டது. ஆனால் அதைக் குடிப்பதற்குக் காக்கையின் அலகு எட்டவில்லை.

அது தனக்கு எட்டும்படி நீர் மேலே வந்தால் குடிக்கமுடியும் என்று முடிவு செய்தது. அதற்கு என்ன செய்வது என்று சிறிது நேரம் எண்ணிற்று. அருகில் ஓர் இடத்தில் சிறு கற்கள் இருந்தன. அக் கற்களை ஒவ்வொன்ருக எடுத்து சாடிக்குள் போட்டது. தண்ணீர் மேலே வந்தது.

தன் முயற்சி பயன் பெற்றது கண்டு காகம் மகிழ்ச்சியுற்றது. தனக்கு வேண்டிய மட்டும் நீரைக் குடித்தது. நீர் வேட்கை தணிந்தது. பின் தன் இருப்பிடத்திற்குப் பறந்து போயிற்று.

| | | |
|---|---|---|
| **வெயிற்காலம்** | **எங்கெங்கோ** | **பயன் பெற்றது** |
| **மகிழ்ச்சியுற்றது** | **தணிந்தது** | **முற்றம்** |
| **இருப்பிடம்** | **எட்டும்படி** | **உட்புறம்** |

**கேள்விகள் :**

1. முதலில் நீர் எங்கே இருந்தது ?
2. காகம் என்ன செய்தது ?
3. நீர் எப்படி மேலே வந்தது ?

## 26. குத்து விளக்கும், மின்சார விளக்கும்

**குத்து விளக்கு :** தம்பி, மின்சார விளக்கே! நீ வந்து என் வாழ்வைக் கெடுத்துவிட்டாயே! உனக்கு இது முறையா?

**மின்சார விளக்கு :** குத்து விளக்கு அண்ணு, உங்களுக்கு வணக்கம். வீணுக என்மீது சினம் கொள்கிறீர்களே! என்னிடம் உள்ள சிறப்பினுல் மக்கள் எல்லோரும் என்னையே விரும்புகிறுர்கள்.

**கு. வி. :** என்னைவிட உனக்கு என்ன சிறப்பு ஏற்பட்டு விட்டது?

**மி. வி. :** உம்முடைய வெளிச்சம் மிகக் குறைவானது. என்னுடைய வெளிச்சம் பல மடங்கு மிகுந்தது. மிகச் சிக்கனமான பொருட் செலவில் மக்கள் என் ஒளியை மிகுதியாகப் பெறுகிறுர்கள்.

**கு. வி. :** இன்னும் உனக்குத் தெரிந்ததையெல்லாம் சொல்; பார்ப்போம்.

**மி. வி. :** சிறு காற்று அடித்தாலும் நீர் அணைந்து விடுகிறீர். பெருங்காற்றிலும் நான் அணைய மாட்டேன். உம்மை ஏற்ற வேண்டுமென்றுல் தீக்குச்சி வேண்டும்; ஏற்றிய பிறகு இடை இடையே உம்மைத் தூண்ட வேண்டும். உம்மைத் தொட்டாலோ, தொட்டவர் கையெல்

லாம் எண்ணெய் ஆகிவிடும். என்னைத் தொட்டால் எண்ணெய் ஆகுமா? என் ஒளியைப் பெறுவதற்கு எண்ணெய் வேண்டாம்; திரி வேண்டாம்; தூண்டுகோலும் வேண்டாம். பித்தானைத் தட்டிவிட்டால் போதும்; 'பளிச்' என்று ஒளி வீசுவேன்.

கு. வி.: எல்லாம் சொல்லி முடித்து விட்டாயா? வீண் பெருமை பேசுவதில் நீ கெட்டிக்காரன். நீ மிகப் பொல்லாதவன். உன்னைத் தொட்டால் உயிரே போய்விடுமே. அப்படியிருந்தும் உனக்கு என்ன இவ்வளவு வாழ்வு?

மி. வி.: என்னை ஏன் தொட வேண்டும்? 'தொடாதே, அபாயம்' என்று நான்தான் எச்சரிக்கை செய்கிறேனே.

கு. வி.: நல்ல வாயாடி நீ. உன் குறை எனக்குத் தெரியாதோ? நல்ல நேரத்தில், ஏதோ காரணத்தால் திடீரென்று நீ நின்று விடுகிருயே. அப்போது நான்தானே முன்வந்து உதவுகிறேன்.

மி. வி.: அண்ணு, நாம் ஒருவரை யொருவர் குறைவாகப் பேச வேண்டாம். நிறைந்த ஒளியை நான் எங்கும் கொடுக்கிறேன். ஆகையால் நானும் சிறப்பாக வாழ வேண்டும். நீர் என்றும் இருப்பவர். பழங்காலத்து அண்ணு. நீரும் வாழ வேண்டும். இருவரும் நலமாக இருப்போம்.



## 27. குயவனூர்

குயவனூர் மண்பாண்டங்களைச் செய்கிறூர். மண்பாண்டங்களில் சமைத்த உணவு உடலுக்கு நல்லது. அரிசி, பருப்பு முதலிய பொருள்களை அவைகளில் வைக்கலாம். தண்ணீரும் வைத்துக் கொள்ளலாம். அவைகளின் விலை மிகக் குறைவு.

மண்பாண்டங்கள் செய்வதற்கு நல்ல களிமண் வேண்டும். குயவனூர் களிமண்ணைத் தண்ணீர் ஊற்றி ஊற வைப்பார். பிறகு அதனுடன் அளவாக மணலைச் சேர்ப்பார். பிறகு அதைப் பிசைந்து, கற்களை நீக்குவார்.

பிறகு அந்த மண்ணைச் சக்கரம் என்ற கருவியின் மீது வைப்பார். சக்க்ரத்தின் ஓரத்தில் ஒரு சிறு துளை இருக்கும். அதில் ஒரு கழியின் நுனியை

வைப்பார். அந்தக் கழியால் சக்கரத்தை வேகமாகச் சுற்றி விடுவார். பிறகு மண்ணைக் கையால் பிடிப் பார்.

இப்படிச் செய்வதில் பாதி உருவம் பாத்திரங் களுக்கு வந்துவிடும். பிறகு சக்கரத்தை விட்டு அவற்றை எடுத்து விடுவார். மீதி உருவம் உண்டாக ஒருவித மரக்கட்டையால் தட்டுவார். அதனுல் அவைகளுக்கு முழு உருவமும் உண்டாகிவிடும்.

பிறகு அவைகளை உலரவைப்பார். உலர்ந்த பின் ஒழுங்காக அடுக்குவார். நெருப்பிலிட்டுச் சுடுவார். இதற்குச் "**சூளை போடுதல்**" என்று பெயர்.

முற்காலத்தில் மண்பாத்திரங்களை அதிகமாக மக்கள் பயன்படுத்தினர். குடிசைத் தொழில்களில் குயவனுர் தொழில் சிறந்தது.

| | | |
|---|---|---|
| **குயவனுர்** | **சமையல்** | **களிமண்** |
| **பாண்டம்** | **கருவி** | **ஊற** |
| **பிசை** | **நெருப்பு** | **சக்கரம்** |
| **உருவம்** | **சூளை** | **குடிசைத் தொழில்** |
| **விலை** | **உலர** | **சுடுவார்** |
| **கழி** | **துளை** | |

**கேள்விகள் :**

1. குயவனுரிடம் உள்ள கருவிக்கு என்ன பெயர்?
2. சூளை போடுதல் என்ருல் என்ன?
3. மண்பாண்டங்களின் பயன்கள் யாவை?

## 28. பாடும் பலனும்

தோலை உரித்த பிறகுதான்,
சுளையைத் தின்று பார்க்கலாம்.

ஓட்டை உடைத்த பிறகுதான்,
உள்ளே பருப்பைக் காணலாம்.

உலையில் அரிசி வெந்துதான்,
உண்டு பசியைப் போக்கலாம்.

துணியைத் தைத்த பிறகுதான்,
சொக்காய் போட்டு மகிழலாம்.

எழுத்தைக் கற்ற பிறகுதான்,
ஏட்டைப் படித்து அறியலாம்.

பாடு பட்ட பிறகுதான்,
பலனைக் கண்டு மகிழலாம்.

—குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா

# 29. நாயின் நன்றி

உறையூர் என்ற ஊரில் அருளப்பன் என்று ஒரு செல்வர் இருந்தார். அவருக்கு நாய் என்ருல் மிக விருப்பம். அவர் ஒரு நல்ல இனத்தைச் சேர்ந்த நாயை வளர்த்து வந்தார். அதை 'அன்பு' என்றே அழைத்தார். அன்பைத் தன் பிள்ளையைப் போல் காப்பாற்றி வந்தார். அன்பும் அவரிடம் நன்றி கொண்டு பழகி வந்தது. அவர் எங்குச் சென்ருலும் அன்பும் அவருடன் போகும்.

ஒரு நாள் அருளப்பன் ஆற்றுக்குக் குளிக்கச் சென்ருர். அன்பும் அவருடன் சென்றது. ஆற்றின் கரையோரத்தில் ஒரு முதலை இருந்தது. அருளப்பன் அதைப் பார்க்கவில்லை. அன்பு அந்த முதலையைப் பார்த்துவிட்டது. அவர் முன்னே ஓடிச் சென்றது. குரைத்துக் குரைத்து அவரை நீரில் இறங்காதபடித் தடுத்தது. நாய் குரைத்த காரணத்தை அவர் தெரிந்து கொள்ளவில்லை. 'ஏதோ குரைக்கிறது. குரைப்பது நாயின் இயல்பு' என்று எண்ணினர். துறையை நோக்கியே முன் நடந்தார். மேலும் ஆற்றில் இறங்கச் சென்ருர். அன்பு அவருடைய துணியைக் கௌவிப் பிடித்து இழுத்தது. நீரில் கால் வைக்காதபடி அவரைத் தடுக்க முயன்றது. அப்பொழுதும் அவர் நாயின் செய்கையைப் பற்றிச் சிந்திக்கவில்லை. மேலும் மேலும் குரைத்தது. அவர் ஏன் என்று உணரவில்லை. துணியைக் கடித்துத் தடுத்த

தையும் பொருட்படுத்தவில்லை. நீரில் இறங்குவதி லேயே அவருடைய கவனம் இருந்தது. அவர் அதை ஓர் அடி அடித்துத் தள்ளிவிட்டு ஆற்றில் இறங் கினார். ஒரு நிமிடம் நின்றால் முதலை அருளப்பனைப் பிடித்துக்கொண்டிருக்கும்.

அன்பு தான் பட்ட அடியையும் பொருட்படுத்த வில்லை. தலைவனைக் காப்பாற்றவே எண்ணிற்று. முதலைக்கு நேரே தான் ஒரே பாய்ச்சலாகக் குதித் தது. முதலை அன்பைப் பற்றிக் கொண்டது. அன்பு நீரில் குதித்ததை அருளப்பன் கண்டார். நீரில் முதலை இருந்ததை அப்பொழுதுதான் அவர் கண் டார். "என் அன்பே முதலைக்கு இரை ஆனாயே; என் உயிரைக் காக்க வேண்டி நீ உயிர் துறந்தாயே; நீ செய்த எச்சரிக்கையை நான் அறியாமல் போனேனே;" என்று அலறினார். துயரத்துடன் வீடு திரும்பினார். அன்பின் செய்கையைச் சொல் லிச் சொல்லி அழுதார்.

| | | |
|---|---|---|
| **கௌவி** | **குரைத்துக் குரைத்து** | **தலைவன்** |
| **இரை** | **சொல்லிச் சொல்லி** | **முதலை** |
| **அலறினார்** | **பொருட்படுத்த** | **பற்றி** |
| **உணரவில்லை** | **செய்கை** | **குதித்தது** |
| **பிள்ளையைப்போல்** | **எச்சரிக்கை** | |

**கேள்விகள் :**

1. முதலை எங்கே இருந்தது ?
2. அதைப் பார்த்ததும் அன்பு என்ன செய்தது ?
3. அன்பு எப்படி இறந்தது ?



# 30. ஆலமரம்

படத்திலுள்ள மரம் என்ன மரம்? ஆலமரம். ஆலமரம் மிகப் பரந்து வளரும். அதன் கிளைகளிலிருந்து விழுதுகள் தோன்றி இருப்பதைப் பாருங்கள். அவைகள் நிலத்தில் இறங்கி ஊன்றிக்கொள்கின்றன. அவைகள் வரவரப் பருத்துத் தூண்கள் போல் கிளைகளைத் தாங்குகின்றன.

கிளைகளில் இலைகள் அடர்ந்து இருக்கும். இவ்வாறு வளர்ந்துள்ள ஆலமரம் ஒரு பெரிய பந்தல் போல் காட்சி அளிக்கிறது. ஆலமரத்தின் பழங்கள் செக்கச் செவேல் என்று இருக்கும். இலைகள் பச்சை. பழங்கள் சிவப்பு. அவைகள் பார்வைக்கு மிக அழகாக இருக்கும்.

ஆலமரம் பரந்த நிழல் தரும். ஆலமரத்தின் நிழலில் வழிப் போக்கர்கள் தங்கி இளைப்பாறுவார்

கள். ஆடுமாடுகளும் ஆலமரத்தின் நிழலில் வந்து தங்கும்.

ஆலிலைகளைச் சிலர் ஈர்க்கால் தைப்பார்கள். அவைகளில் சாப்பிடுவார்கள். சிறிய விழுதுகளால் பல் துலக்கலாம். ஆலம் விழுது பற்களுக்கு உறுதியை உண்டாக்கும். தொங்கும் விழுதுகளைப் பிடித்துக்கொண்டு பிள்ளைகள் ஊஞ்சல் ஆடுவார்கள். பெரிய விழுதுகள் கனமுள்ள பொருள்களைத் தூக்க வாரைகளாகப் பயன்படும்; வண்டிக்கு நுகத்தடி செய்யவும் உதவும். மரம் அடுப்பு எரிக்க உதவும். பழங்களைப் பறவைகள் உண்ணும். அவை வெளி யிடும் எச்சத்தில் உள்ள விதைகள் நிலத்தில் விழும். அவ்விடத்தில் மரம் தோன்றும்.

ஆலம்பழம் மிகச் சிறியது. ஆலம்பழத்தி லுள்ள விதைகள் கடுகைவிடச் சிறியவை. அவ் விதைகளிலிருந்து எவ்வளவு பெரிய மரம் வளர் கிறது! இது இயற்கையின் அருமை!

| | | |
|---|---|---|
| **கிளை** | **பரந்து** | **தாங்குகின்றன** |
| **விதை** | **ஊன்றி** | **வழிப்போக்கர்** |
| **விழுது** | **அடர்ந்து** | **இளைப்பாறு** |
| **ஈர்க்கு** | **தங்கி** | **அருமை** |
| **வாரை** | **எரிக்க** | **கடுகு** |
| **நுகத்தடி** | **இயற்கை** | |

**கேள்விகள் :**

1. பெரிய ஆலமரம் எதிலிருந்து முளைக்கிறது?
2. ஆலமரம் எப்படி வளர்கிறது?
3. விழுதுகள் எவ்வாறு பயன்படும்?

## 31. ஆட்டம் ஆட

ஆட்டம் ஆட ஆரம்பிப்போம்
பாட்டுப் பாடிப் பலவிதமாய்.

கால்கள் எட்டி வைத்திடுவோம்
கைகள் வீசி வேகமதாய்.

தலையை நிமிர்த்தி நேராக
வீரரைப் போல நடந்திடுவோம்.

கைகள் கோத்தே ஆடிடுவோம் ;
கைகளை விட்டே ஓடிடுவோம்.

வட்ட மிட்டே நின்றேநாம்
வாகாய்க் கும்மிகள் அடித்திடுவோம்.

பாடம் எல்லாம் படித்திடுவோம் ;
பண்பாய் என்றும் நடந்திடுவோம்.

மக்கள் யாவரும் ஒன்றெனவே
மகிழ்ந்தே கும்மி அடித்திடுவோம்.

ஒற்றுமை கொண்டு நாமெல்லாம் ;
உண்மை வழியில் நடந்திடுவோம்.

இந்தியத் தாயின் பழம்பெருமை
என்றும் ஓங்கத் காத்திடுவோம்.

—அரவரசனார்

7B 031(22 N58

## 32. எறும்புகள்

எறும்பு ஒரு சிற்றுயிர். அதன் உடல் மிகமிகச் சிறியது. இவ்வளவு சிறிய உடலில் கண்கள், கால்கள், வாய் முதலிய உறுப்புக்கள் அமைந்திருப்பது எவ்வளவு வியப்பு! படைப்பின் விந்தையே விந்தை!

ஊர்ந்து செல்லும் உயிர்களில் எறும்பு ஒன்று. எறும்புகள் புற்றில் வாழும். ஆனாலும் அவை சாரி சாரியாகப் போவதை வெளியில் காணலாம்.

எறும்புகளில் சிற்றெறும்பு, கட்டெறும்பு, பிள்ளையார் எறும்பு, கொள்ளி எறும்பு, கறையான் எறும்பு எனப் பலவகைகள் உண்டு. சிற்றெறும்பும், கொள்ளி எறும்பும் சிவப்பு நிறமாக இருக்கும். பிள்ளையார் எறும்பும், கட்டெறும்பும் கருமை நிறமாக இருக்கும். கறையான் எறும்பு வெண்மை நிறமானது.

பிள்ளையார் எறும்பு கடிக்காது. மற்ற எறும்புகள் கடிக்கும். 'எறும்பு கடித்த மாதிரி' என்ற பழமொழியும் உண்டு. கொள்ளி எறும்பு கடித்தால் அதிகமாகக் கடுக்கும்.

எறும்புகளுக்கு இனிப்புப் பண்டங்களில் விருப்பம் அதிகம். அதனால் "கரும்பு கட்டோடு இருந்தால் எறும்பு தானே வரும்" என்று சொல்வார்கள்.

ஈரமுள்ள இடங்களில் எறும்புகள் ஊர்ந்து கொண்டிருக்கும். தண்ணீர்ப் பானைகளுக்கு அடியிலும் எறும்புகள் சுற்றுவதைப் பார்க்கலாம்.

சென்னை-600 008.
136186

எறும்புகள் சுறுசுறுப்பு உள்ளவை. எறும்புகள் இன ஒற்றுமை உடையவை. அவைகள் பல ஒன்ருகச் சேர்ந்து ஒற்றுமையுடன் இரை தேடும். எறும்புகள் உடலில் சிறியவை; வேலையில் பெரியவை. பல எறும்புகள் ஒன்று சேர்ந்து கட்டிடங்களையும் துளைத்து விடுவது உண்டு. மழைக் காலத்திற்கு வேண்டிய உணவை, வெயில் காலத்திலேயே தேடிக் கொள்ளும். மழை வருவதை அவை முன்னுலேயே தெரிந்து கொள்ளும்; முட்டைகளை எடுத்துக் கொள்ளும்; மேடான இடங்களுக்குப் போகும். "எறும்புகள் முட்டை கொண்டு திட்டை ஏறிஞல், மட்டிலாத மழையும், திட்டமாகப் பொழியும்" என்பர்.

எறும்பைப் போலவே நாமும் சுறுசுறுப்பாக இருக்க வேண்டும். ஒற்றுமையாகக் கூடி வாழ வேண்டும்.

| | | |
|---|---|---|
| **உயிர்** | **சாரிசாரி** | **தேடிக் கொள்ளும்** |
| **ஊர்ந்து** | **கடுக்கும்** | **சுறுசுறுப்பு** |
| **புற்று** | **திட்டு** | **திட்டமாக** |
| **துளைத்து** | **மட்டு** | **பொழியும்** |
| **விந்தை** | **சிற்றுயிர்** | |

**கேள்விகள் :**

1. எறும்புகளில் பலவகைகள் யாவை?
2. மழை வருமுன் எறும்புகள் என்ன செய்யும்?
3. எந்தப் பண்டங்களில் எறும்பிற்கு விருப்பம் அதிகம்?

## 33. கூடா நட்பு

(எலியும், தவளையும்)

வயலூர் என்பது ஒரு நல்ல ஊர். அவ்வூரை யடுத்து ஒரு பெரிய குளம் உண்டு. அக்குளத்தில் எப்போதும் நீர் நிரம்பி இருக்கும்; அது பார்வைக்கு நல்ல காட்சி அளிக்கும்.

அக்குளத்தை யொட்டி வயல்களும் உண்டு. வயல்களின் வரப்புக்களில் பல எலிகள் வளை தோண்டிக் கொண்டு வாழ்ந்து வந்தன. அவ்வெலிகள் அடிக்கடி வளைகளினின்று வெளியே வரும்.

குளத்தில் பல தவளைகள் வாழ்ந்து வந்தன. அத்தவளைகள் நீரிலும் இருக்கும். அடிக்கடி தரையின்மீதும் வரும். அத்தவளைகளுள் ஒன்று மிகவும் கொழுத்துப் பருத்து இருந்தது. ஒரு நாள் அது வழக்கம்போல் குளக்கரையில் விளையாடிக் கொண்டிருந்தது. அப்போது தன்னைப்போலவே கொழுத்துப் பருத்த ஓர் எலியைக் கண்டது.

அதைப் பார்த்து "எலியே, எலியே, நாம் இருவரும் நட்புக் கொள்ளலாமா" என்று கேட்டது. எலி "அப்படியே ஆகட்டும்" என்றது. அன்று முதல் இரண்டிற்கும் நட்பு உண்டாயிற்று.

ஒரு நாள் தவளை எலியைப் பார்த்து "எலி அண்ணவே, நாம் இருவரும் ஒருவரை யொருவர் விட்டுப் பிரியவே கூடாது" என்றது. "தம்பீ நானும் அப்படியே நினைக்கிறேன்," என்று எலியும்

கூறிற்று. அவைகள் இரண்டும் ஒன்றுக்கொன்று, காலோடு காலைக் கயிற்றால் கட்டிக் கொண்டன.

திடீரென்று ஓர் அரவம் கேட்டது. தவளை நீரில் ஓடிக் குதித்து மூழ்கிக் குளத்தின் உள்ளே சென்றது. எலியும் தரதர என்று உடன் இழுத்துச் செல்லப் பட்டது. எலி நீருக்குள் இருக்க முடியுமா? திக்குமுக்காடி இறந்தது. நீரின்மேல் மிதந்தது. அப்போது வானத்தில் ஒரு பருந்து வட்டமிட்டுக் கொண்டு இருந்தது. செத்து மிதந்து கொண்டிருந்த எலியைக் கண்டது; சரேலென்று அதன்மேல் பாய்ந்தது. எலியின் உடலைத் தன் கால்களால் பற்றிக் கொண்டு பறந்தது. எலியின் காலோடு கட்டப் பட்டிருந்த தவளையும் பருந்திற்கு இரை ஆயிற்று.

தவளையுடன் எலி கூடா நட்புக் கொண்டது. அதனால் உயிரிழந்தது. சேரத் தகாதவர்களோடு சேரக் கூடாது. சேரத் தக்கவர்களோடு சேர வேண்டும்.

| | | |
|---|---|---|
| **அரவம்** | **தக்கவர்** | **திடீரென்று** |
| **மூழ்கிற்று** | **திக்குமுக்காடி** | **ஒன்றுக்கொன்று** |
| **தகாதவர்** | **பற்றிக் கொண்டு** | **காலோடுகாலை** |
| **மிதந்து** | **சரேலென்று** | **வட்டமிட்டுக் கொண்டு** |

**கேள்விகள் :**

1. எலியும், தவளையும் என்ன செய்து கொண்டன?
2. தவளை ஏன் நீருக்குள் சென்றது?
3. எலி ஏன் உயிர் இழந்தது?



## 34. போலீசுக்காரர் உதவி

**பையன் :** (அழுது கொண்டே) அப்பா! அப்பா!

**போலீசுக்காரர் :** தம்பீ, ஏன் அழுகிருய்?

**பையன் :** என் தந்தை என்னை விட்டுவிட்டு எங்கேயோ போய்விட்டார்.

**போலீசுக்காரர் :** உன் தந்தையும் நீயும் எங்கே இருந்தீர்கள்?

**பையன் :** நானும் என் தந்தையும் திருவிழா விற்கு வந்தோம். தேரைப் பார்த்துக் கொண்டு நின்ருேம். ஒரு பெரிய கும்பல் வந்தது. மக்கள் என்னை ஓர் ஓரத்தில் ஒதுக்கித் தள்ளிவிட்டார்கள். பிறகு என் தந்தையைப் பார்த்தேன். காணேம்.

**போலீசுக்காரர் :** அவருடைய பெயர் என்ன?

**பையன் :** அவர் பெயர் அம்பலவாணர்.

**போலீசுக்காரர் :** அவருக்கு என்ன வேலே ?

**பையன் :** அவருக்கு இரயிலில் வேலே.

**போலீசுக்காரர் :** உன் வீடு எங்கே இருக் கிறது ?

**பையன் :** திருச்சிராப்பள்ளிக் கோட்டையில் ஆண்டார் வீதியில் இருக்கிறது.

**போலீசுக்காரர் :** அழாதே; இன்னெரு போலீ சுக்காரருடன் உன்னே அனுப்புகிறேன். அவர் உன்னே வீட்டில் கொண்டுபோய் விடுவார்.

**போலீசுக்காரர் :** (ஊது குழலே ஊதி) **211 !**

**211 :** வணக்கம்.

**போலீசுக்காரர் :** இந்தப் பையனே வண்டியில் ஏற்றிக்கொள். திருச்சிக் கோட்டை ஆண்டார் வீதி யில் அம்பலவாணர் வீட்டில் கொண்டுபோய்விடு.

**211 :** அவ்வாறே செய்கிறேன் ; வணக்கம். (பையனே அழைத்துக் கொண்டு செல்கிருர்.)

| | | |
|---|---|---|
| **கும்பல்** | **விட்டுவிட்டு** | **ஊதுகுழல்** |
| **வணக்கம்** | **ஒதுக்கி** | **போலீசுக்காரர்** |
| **அனுப்புகிறேன்** | **தள்ளிவிட்டு** | |

**கேள்விகள் :**

1. சிறுவன் ஏன் அழுதுகொண்டிருந்தான் ?
2. 211. என்ன செய்தார் ?
3. கும்பலில் மக்கள் சிறுவனே என்ன செய்தார்கள்?



## 35. இரயில் பாட்டு

1. ஓடுது பார் இரயில் ஓடுது பார்.
உயரப் புகையைக் கக்கிக் கொண்டே.

2. குபுகுபு என்ற சத்தமுடன்
கூவிக் கொண்டே ஓடுது பார்.

3. அறை யறையாக வண்டிகள் பார்.
அவைகள் நிறைய மக்களைப் பார்.

4. அநேக ஊரின் கடிதங்களை
அள்ளிக் கொண்டே போகுது பார்.

5. சிவப்புக் கொடியைக் கண்டவுடன்
சீக்கிரம் நிற்கும் வேடிக்கை பார்.

6. பச்சைக் கொடியைப் பார்த்தவுடன்
பறந்தே போகுது ஊதிக்கொண்டே.

—ரா. து. கம்பதாசன்.



## 36. சிங்கம்

சிங்கம் ஒரு காட்டு விலங்கு. அது மரங்கள் அடர்ந்த பெரிய காடுகளில் வாழும். அதற்கு அரிமா என்றும் பெயர். சென்னையில் உள்ள மிருகக் காட்சிச் சாலையில் சிங்கத்தை வளர்க்கிறார்கள். சர்க்கசுகளி லும் இவ்விலங்கைக் காணலாம்.

சிங்கத்திற்கு இரவில் கண்கள் நன்றாகத் தெரி யும். ஆகையால் அது இரவில் இரை தேடப் புறப் படும். குகைகளிலும், புதர்களிலும் தங்கியிருக்கும். சிங்கம் கத்துவதைக் கர்ச்சனை என்பார்கள்.

இது புலால் உண்டு வாழும். தனக்கு இரை யாகும் உயிர்களையே அடித்துக் கொன்று புசிக்கும்.

இது கொடிய விலங்குகளின் இனத்தைச் சேர்ந்தது. என்றாலும் இதனிடம் பல அரிய பண்புகள் உண்டு. பசியில்லாதபோது எந்த உயிரையும் கொல்லாது. தனக்கு உணவு ஆகாத சிறு உயிர்களை இது வீணாக எதிர்க்காது. தனக்கு நிகரான யானை, புலி முதலிய விலங்குகளுடன்தான் எதிர்த்துப் போர் செய்யும்.

இவ்விலங்கு நல்ல தோற்றம் உடையது. உடல் வன்மை மிகவும் உடையது; அஞ்சாத நெஞ்சம் படைத்தது. ஆண் சிங்கத்திற்குக் கழுத்தின் மேற் புறத்தில் அடர்ந்த மயிர் இருக்கும். அதற்குப் பிடரி மயிர் என்று பெயர். பெண் சிங்கத்திற்குப் பிடரி மயிர் இல்லை.

மக்களில் துணிவும், வலிமையும் உடையவர்களைச் சிங்கத்திற்கு ஒப்பிட்டுப் பேசுவார்கள்.

| | | |
|---|---|---|
| அரிமா | புசிக்கும் | புதர் |
| புலால் | கொடிய | அஞ்சாத நெஞ்சம் |
| ஒப்பிட்டு | தோற்றம் | மிருகக் காட்சிச்சாலை |
| நிகரான | பிடரிமயிர் | அரிய பண்பு |
| குகை | எதிர்த்து | போர் செய்யும் |

**கேள்விகள் :**

1. சிங்கம் எங்கே வாழும்?
2. சிங்கத்தின் அரிய பண்புகள் யாவை?
3. சிங்கம் எந்த விலங்கினத்தைச் சேர்ந்தது?



## 37. கோவிந்தன் தந்திரம்

ஓர் ஊரில் கோவிந்தன் என்று ஒருவன் இருந்தான். அவன் ஒருநாள் சந்தைக்குப் போனான். கடைகளில் தனக்குத் தேவையான சாமான்களை வாங்கினான். பிறகு வீட்டுக்குத் திரும்பினான்.

வரும்பொழுது அவனுக்கு நீர் வேட்கை உண்டாயிற்று. அருகில் வீடு, கிணறு, குளம் ஒன்றும் காணப்படவில்லை. ஆகையால் அவனுக்குக் குடிநீர் கிடைக்கவில்லை. நீர் வேட்கையை அடக்க முடியாமல் தவித்தான்.

அவன் வரும் வழியில் தென்னை மரங்கள் நெடுக இருந்தன. அவற்றில் இளங்காய்கள் குலை குலையாகக் காய்த்திருந்தன. அம்மரங்களின் மீது குரங்குகள் பல இருந்தன.

அக்காட்சிகளைக் கண்டான் கோவிந்தன். "இளநீர் குடித்தால் என் நீர்வேட்கை தீரும்.

எனக்கோ தென்னைமரத்தில் ஏறத் தெரியாதே. என்ன செய்வது?'' என்று எண்ணினான்.

அப்போது அவனுக்கு ஒரு தந்திரம் தோன்றிற்று. தரையிலிருந்த சிறு கருங்கற்களைப் பொறுக்கினான். அவைகளைக் குரங்குகளின் மேல் எறிந்தான். மரத்தின்மேல் இருந்த குரங்குகள் 'உர் உர்' என்று அவனை நோக்கின. மரத்திலிருந்த இளங்காய்களைப் பறித்தன. கோவிந்தனை நோக்கி அவைகளை எறிந்தன. கோவிந்தன் ''என் எண்ணம் நிறைவேறிற்று'' என்று தனக்குள் சொல்லிக் கொண்டான். இரண்டு காய்களைக் கல்லில் அடித்தான். மட்டையை உரித்தான். காயைப் பொத்து இளநீரைக் குடித்தான். நீர் வேட்கை தீர்ந்தது. வீட்டை நோக்கி நடந்தான்.

| | | |
|---|---|---|
| **தந்திரம்** | **நோக்கி** | **உரித்து** |
| **சந்தை** | **மட்டை** | **இளங்காய்** |
| **சாமான்** | **நீர்வேட்கை** | **எண்ணினான்** |
| **தீரும்** | **தவித்தான்** | **பொறுக்கினான்** |
| **பொத்து** | **எறிந்தான்** | **நிறைவேறிற்று** |

**கேள்விகள் :**

1. கோவிந்தன் செய்த தந்திரம் என்ன?
2. குரங்குகள் என்ன செய்தன?
3. வழியில் கோவிந்தன் கண்ட காட்சி என்ன?



## 38. ஆசைகொண்ட நாய்

ஆசை கொண்ட நா யொன்று
அங்கோர் இறைச்சியைக் கண்டதுவே.
அதைத்தன் வாயில் கௌவிக் கொண்டு
ஆற்றின் பாலம் கடந்ததுவே.
கடக்கும் போது நீரி னுள்ளே
கண்டது தன்போல் ஒருருவை.
வேறொரு நாயென எண்ணி யதன்
இறைச்சித் துண்டையும் பிடுங்கிடவே.
வாள்வாள் எனவே வாய் திறந்து
நீரின் உள்ளே பாய்ந்ததுவே.
தன்வாய் இருந்த துண்டதுவும்
தானே நீருள் வீழ்ந்ததுவே.
ஆசை கொண்ட நாயதுவும்
ஐயோ உணவை இழந்ததுவே.

—அரவரசனார்.

## 39. ஔவையார்

சிறுவர்கள், பெரியவர்கள் ஆகிய எல்லோருக்கும் ஔவையாரின் பெயர் தெரியும். திரைப் படத்திலும் ஔவையார் வந்துவிட்டார்.

ஔவையார் ஒரு பெண்பாற் புலவர். தமிழ் நாட்டில் பிறந்து, வளர்ந்து, வாழ்ந்தவர். பல நூற்ருண்டுகளுக்குமுன் இருந்தவர். நீண்ட காலம் உயிரோடு இருந்தார். ஆகையால் அவரை ஔவைப் பாட்டி என்று சொல்வார்கள்.

ஔவையார் நிறைந்த கல்வியறிவு உடையவர். நல்ல உள்ளம் படைத்தவர். உண்மையாக நடப்பவர்.

அரசர்களும், பெருஞ் செல்வர்களும், மற்றவர்களும் ஔவையாரை மிகவும் போற்றினர்கள். அவரைக் களிப்புடன் வரவேற்ருர்கள். அவருக்கு வேண்டுவன அளித்து உதவி செய்தார்கள். அவர் சொற்படி நடந்தார்கள். ஆகையால் ஔவையார் மிக்க சிறப்புடன் விளங்கினர்.

ஆயினும் அவர் சிறிதும் செருக்கில்லாமல் வாழ்ந்தார். அவர் எளிய வாழ்க்கையைக் கொண்டார். ஒருவர் சிறிய உதவி செய்தாலும் அதைப் பெரியதாக மதிப்பார்.

பசிக்குக் கூழ் வார்த்தவர்களையும் ஔவையார் மிகக் கொண்டாடுவார். அவரைப் புகழ்ந்து கவி

பாடுவார். அதனுல் ஔவையாரைக் **கூழுக்குப் பாடி** என்றும் சிறப்பித்துக் கூறுவார்கள்.

அரசர்களுக்குள் பகை தோன்றினுல் ஔவையார் அவர்களிடம் செல்வார். நல்லறிவு புகட்டி அவர்களே ஒற்றுமைப் படுத்துவார். மக்கள் நலம் பெற்று வாழவேண்டும் என்பதே அவருடைய எண்ணம்.

ஔவையாருக்கு உங்களேப் போன்ற சிறுவர்களிடத்தில் மிகவும் விருப்பம். உங்களுக்காகப் பல சிறு நூல்களே இயற்றி இருக்கிறுர். அவைகளே நீங்கள் படிக்க வேண்டும். அவைகளில் கூறியுள்ளபடி நடக்க வேண்டும். அவை ஆத்திசூடி, கொன்றை வேந்தன், மூதுரை, நல்வழி என்பன.

| | | |
|---|---|---|
| **அளித்து** | **வரவேற்றுர்கள்** | **எளியவாழ்கை** |
| **பெண்பால்** | **தமிழ்நாடு** | **உள்ளம்** |
| **புலவர்** | **பிறந்து** | **மதிப்பார்** |
| **நூல்கள்** | **வளர்ந்து** | **கல்வியறிவு** |
| **படைத்தவர்** | **செருக்கு** | **நலம்பெற்று** |
| **ஒற்றுமைப்படுத்துவார்** | | |

**கேள்விகள் :**

1. ஔவையார் இயற்றிய நூல்களில் இரண்டு கூறு.
2. ஔவையார் எப்படிப்பட்ட எண்ணம் உடையவர்?
3. கூழுக்குப்பாடி என்று ஔவையாருக்கு ஏன் பெயர் வந்தது?

# 40. கெட்டவன் கேடு அடைந்தான்

ஆமூர் என்பது ஒரு சிற்றூர். அவ்வூரில் திண்ணன் என்று ஒரு சிறுவன் இருந்தான். அவன் மிகவும் தீயவன். யாருக்காவது ஏதாவது கெடுதல் செய்வதே அவனுக்கு வேலை. நாயைக் கண்டால் கல்லால் அடிப்பான். அணிலைக் கண்டால் அதனைப் பிடித்துக் கொல்வான். குழந்தைகளின் தலையில் மண்ணை வாரிப் போடுவான். இப்படியாக அவன் ஒவ்வொரு நாளும் ஏதாவது குறும்பு செய்து கொண்டே இருப்பான்.

ஒரு நாள் அவன் வழக்கம்போல் ஆற்றங்கரைக் குச் சென்றான். அங்கு ஒரு பெரிய படுகை உண்டு. அப்படுகையில் பல மரங்கள் இருந்தன. திண்ணன் அப்படுகையில் அங்குமிங்கும் சுற்றிச் சுற்றிப் பார்த் தான். மரக்கிளைகளை உற்று நோக்கினான். ஒரு மரக்கிளையின் நுனியில் ஒரு குருவிக் கூட்டைக் கண்டான். "இன்று எனக்கு நல்ல வேலை கிடைத் தது. நான் மரத்தின்மேல் ஏறுவேன். கூட்டைப் பிரிப்பேன். குஞ்சுகளைக் கொல்லுவேன்" என்று தனக்குள்ளே சொல்லிக்கொண்டான்.

அப்படியே அவன் மரத்தின்மேல் ஏறினான். கூடு இருந்த கிளைக்குக் கீழ்க்கிளையில் நின்றான். கூடு இருந்த கிளையைப் பிடித்துக்கொண்டான். தான் இருந்த கிளையின் நுனியை நோக்கி இரண்டு அடி எடுத்து வைத்தான்.

பட பட என்று ஓர் ஒலி கேட்டது. அவன் நின்ற கிளை மடமட வென்று முறிந்தது. திண்ணன் "ஐயோ" என்று கீழே விழுந்தான். முழங்கால் எலும்பு அடிபட்டு முறிந்தது. திண்ணன் குரலைக் கேட்டு அருகில் இருந்த பெரியவர்கள் ஓடி வந்தார்கள். நடந்தவைகளைக் கூறி அழுதான் திண்ணன். "நீ கெட்டவன்; கேடு அடைந்தாய்" என்று அவர்கள் கூறினர்கள். எவ்வுயிருக்கும் கேடு நினைத்தல் தகாது.

| | | |
|---|---|---|
| **கேடு** | **கெட்டவன்** | **வாரி** |
| **எலும்பு** | **ஒலி** | **முழங்கால்** |
| **படுகை** | **கொல்லுவேன்** | **முறிந்தது** |
| **வழக்கம் போல்** | **சுற்றிச் சுற்றி** | **தகாது** |

**கேள்விகள் :**

1. திண்ணனுக்கு என்ன வேலை?

2. குருவிக்கூட்டைக் கண்டதும் அவன் என்ன சொல்லிக் கொண்டான்?

3. பெரியவர்கள் திண்ணனைப் பார்த்து என்ன சொன்னர்கள்?



## 41. காந்தித் தாத்தா

காந்தியின் பெயரை யாவரும் அறிவார்கள். இளம்பிள்ளைகள் அவரைக் **காந்தித் தாத்தா** என்பார்கள். மனிதர்கள் அவரைக் **காந்தி மகான்** அல்லது **காந்தியடிகள்** என்பார்கள். அவரை **இந்தியாவின் தந்தை** என்றும் கொண்டாடுவார்கள். காந்தித் தாத்தாவால் தான் நம் நாட்டிற்குச் **சுதந்திரம்** கிடைத்தது.

காந்தித் தாத்தா மிகவும் நல்லவர். எல்லோரிடத்திலும் அன்பு உடையவர். உண்மையே பேசினர். உண்மையாக நடந்தார். தீமை செய்தவர்க்கும்

நன்மையே செய்தார். எல்லோரும் ஒற்றுமையாக இருக்க வேண்டும், எல்லோரும் சமமாகப் பழக வேண்டும் என்று பாடு பட்டார். அவர் நாள் தோறும் காலையிலும், மாலையிலும் கடவுள் வழிபாடு செய்வார். மக்கள் பலரும் அவ்வழிபாட்டில் கலந்து கொள்வார்கள். வழிபாடு முடிந்ததும் அவர் மக்களுக்கு நல்ல அறிவுரைகள் கூறுவார்.

காந்தித் தாத்தா இப்போது உயிரோடு இல்லை. அவர் இறந்தபோது உலகத்திலுள்ள எல்லோரும் துயரம் அடைந்தனர். அவருடைய பெயர் உலகெங்கும் விளங்குகிறது. மக்கள் அவர்க்கு உருவச்சிலை வைத்து அவரைக்கொண்டாடுகிறார்கள். "ஒருவருக்கும் துன்பம் செய்யக் கூடாது. உண்மையும், பொறுமையும் கொண்டு வாழவேண்டும்" என்று அவர் நமக்கு அறிவு கூறியிருக்கிறார். அவர் சொற்படி நடந்தால் எல்லோருக்கும் நன்மை உண்டு.

| | | |
|---|---|---|
| **மகான்** | **சுதந்திரம்** | **சமம்** |
| **அடிகள்** | **சிலைவைத்து** | **அறிவுரைகள்** |
| **நன்மை** | **தீமை** | |

**கேள்விகள் :**

1. மக்கள் காந்தித் தாத்தாவை எப்படிக் கொண்டாடுகிறார்கள் ?
2. காந்தித் தாத்தா எப்படிப்பட்டவர் ?
3. அவர் எதற்காகப் பாடுபட்டார் ?

## 42. உழவர் வாழ்க !

உண்ண உணவு தந்திடும்
உழவர் வாழ்க, வாழ்கவே.
மண்ணை உழுது பயிர்களை
வளர்க்கும் உழவர் வாழ்கவே.

ஒன்றை நூறு நெற்களாய்
உண்டு பண்ணித் தருபவர் ;
நன்கு உழுது வியர்வையால்
நனைந்து போக உழைப்பவர் ;

கண்ணைப் போலப் பயிர்களைக்
காத்து உயிர்கள் காப்பவர்
உண்ண உணவு இன்றியே
உடல் வருந்தல் நீதியோ ?

பாடு பட்டு உழுபவர்
பலனும் கண்டு தருபவர்,
நாடு வளர வாழ்பவர்,
நன்கு வாழ்க, வாழ்கவே !

—குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா

# 43. படத்தைப் பார்த்துக் கதையைச் சொல்



# செய்யுள்

## உலகநீதி

1. ஓதாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம்
ஒருவரையும் பொல்லாங்கு சொல்ல வேண்டாம்
மாதாவை ஒரு நாளும் மறக்க வேண்டாம்
வஞ்சனைகள் செய்வாரோடு இணங்க
வேண்டாம்.

2. நெஞ்சாரப் பொய்தன்னைச் சொல்ல வேண்டாம்
நிலையில்லாத காரியத்தை நிறுத்த வேண்டாம்
நஞ்சுடனே ஒருநாளும் பழக வேண்டாம்
நல்லிணக்கம் இல்லாரோடு இணங்க வேண்டாம்.

3. மனம்போன போக்கெல்லாம் போக வேண்டாம்
மாற்றானை உறவென்று நம்ப வேண்டாம்
தனந்தேடி உண்ணாமல் புதைக்க வேண்டாம்
தருமத்தை ஒருநாளும் மறக்க வேண்டாம்.

4. குற்றமொன்றும் பாராட்டித் திரிய வேண்டாம்
கொலைகளவு செய்வாரோடு இணங்க வேண்டாம்
கொற்றவனோடு எதிர்மாறு பேச வேண்டாம்
கோயிலில்லா ஊரிற்குடி யிருக்க வேண்டாம்.

5. வார்த்தை சொல்வார் வாய்பார்த்துத் திரிய
வேண்டாம்
மதியாதார் தலைவாசல் மிதிக்க வேண்டாம்

மூத்தோர் சொல் வார்த்தைதனை மறக்க
வேண்டாம்
முன்கோபக் காரரோடு இணங்க வேண்டாம்.

6. கருதாமல் கருமங்கள் முடிக்க வேண்டாம்
கணக்கழிவை ஒருநாளும் பேச வேண்டாம்
பொருவார்தம் போர்க்களத்தில் போக வேண்டாம்
பொது நிலத்தில் ஒருநாளும் இருக்கவேண்டாம்.

7. சேராத இடந்தனிலே சேர வேண்டாம்
செய்த நன்றி ஒருநாளும் மறக்க வேண்டாம்
ஊரோடுங் குண்டுணியாய்த் திரிய வேண்டாம்
உற்ருரை உதாசினங்கள் சொல்ல வேண்டாம்.

8. மண்ணின்று மண்ஞேரம் சொல்ல வேண்டாம்
மனஞ்சலித்துச் சிலுக்கிட்டுத் திரிய வேண்டாம்
கண்ணழிவு செய்துதுயர் காட்ட வேண்டாம்
காணுத வார்த்தையைக் கட்டுரைக்க வேண்டாம்.

9. மறம்பேசித் திரிவாரோடு இணங்க வேண்டாம்
வாதாடி வழக்கழிவு சொல்ல வேண்டாம்
திறம்பேசிக் கலகமிட்டுத் திரிய வேண்டாம்
தெய்வத்தை ஒருநாளும் மறக்க வேண்டாம்.

10. தூருக்கித் தலையிட்டுத் திரிய வேண்டாம்
துர்ச்சனராய்த் திரிவாரோடு இணங்கவேண்டாம்
வீருன தெய்வத்தை இகழ வேண்டாம்
வெற்றியுள்ள பெரியோரை வெறுக்க வேண்டாம்.

—உலகநாதர்

## கொன்றை வேந்தன்

1. அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்.
2. ஆலயம் தொழுவது சாலவும் நன்று.
3. இல்லறம் அல்லது நல்லறம் அன்று.
4. ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்.
5. உண்டி சுருங்குதல் பெண்டிர்க் கழகு.
6. ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்.
7. எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்.
8. ஏவா மக்கள் மூவா மருந்து.
9. ஐயம் புகினும் செய்வன செய்.
10. ஒளவியம் பேசுதல் ஆக்கத்திற்கு அழிவு.
11. அஃகமும் காசும் சிக்கனத் தேடு.
12. தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை.
13. தாயிற் சிறந்தொரு கோயிலு மில்லை.
14. திரைகடல் ஓடியும் திரவியம் தேடு.
15. தீராக் கோபம் போரா முடியும்.
16. தெய்வம் சீறின் கைதவம் மாளும்.
17. தேடா தழிக்கிற் பாடா முடியும்.
18. தையும் மாசியும் வையகத்து உறங்கு.
19. தொழுதூண் சுவையின் உழுதூண் இனிது.
20. தோழனோடும் ஏழைமை பேசேல்.
21. நல்லிணக்கம் அல்லது அல்லல் படுத்தும்.

22. நாடெங்கும் வாழக் கேடு ஒன்றும் இல்லை.
23. நிற்கக் கற்றல் சொற்றிறம் பாமை.
24. நீரகம் பொருந்திய ஊரகத் திரு.
25. நுண்ணிய கருமமும் எண்ணித் துணி.
26. நூன்முறை தெரிந்து சீலத் தொழுகு.
27. நெஞ்சை ஒளித்தொரு வஞ்சகம் இல்லை.
28. நேரா நோன்பு சீரா காது.
29. நைபவர் எனினும் நொய்ய உரையேல்.
30. நொய்யவர் என்பவர் வெய்யவர் ஆவர்.
31. நோன்பு என்பது கொன்று தின்னாமை.
32. பண்ணிய பயிரிற் புண்ணியம் தெரியும்.
33. பாலோடு ஆயினும் காலம் அறிந்து உண்.
34. மருந்தே ஆயினும் விருந்தோடு உண்.
35. மாரி அல்லது காரியம் இல்லை.
36. மின்னுக்கு எல்லாம் பின்னுக்கு மழை.
37. முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்.
38. மூத்தோர் சொன்ன வார்த்தை அமிர்தம்.
39. வானம் சுருங்கின் தானம் சுருங்கும்.
40. ஊக்கம் உடைமை ஆக்கத்திற்கு அழகு.

—ஔவையார்

சென்னை-600 008.
136186

386

9-4-64-c